Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 210 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 29ஆம் திகதி புதன்கிழமை (12.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 20, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


**கமெண்ட் கந்தர்...**

தமிழர் பிரச்சினைக்கு சித்திரைப் புதுவருஷத்துக்கு முதல் தீர்வு கிடைக்குமென்று யாரும் சொல்லேல்ல என்னங்கோ..?




'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்

QRஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்


# சமூக ஊடகங்களுக்கு விரைவில் வாய்ப்பூட்டு!

## புதிய அதிகாரசபையை நிறுவுவதற்குத் தயாராகிறது அரசு

*நமது விசேட செய்தியாளர்*

சமூக ஊடகங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கும் வகையில் புதிய அதிகாரசபையொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளது. பேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் இதன்மூலம் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

அதன்பிரகாரம் சமூக வலைத்தளப் பதிவுகள் எவ்வாறானதாக அமையவேண்டும் என்பது தொடர்பில் ஒழுங்குவிதிகள் நிறுவப்பட்டுள்ளதாக அரச உயர்மட்டத் தகவல்கள் 'தமிழன்' நாளிதழுக்குத் தெரிவித்தன.

இவ்வாறு சமூக வலைத்தளங்களை ஒழுங்குபடுத்தும் வகையில் அமைச்சரவை அனுமதிக்கென தயாரிக்கப்பட்ட பத்திரம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் கடந்த திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்படவிருந்தது.

எனினும், அன்றைய தினம் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறாத காரணத்தினால் அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களையும் ஒழுங்குபடுத்துவது தொடர்பில் ஒலி/ஒளிபரப்பு அதிகாரசபையொன்றை நிறுவுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதிகாரசபையை நிறுவுவதற்கும் அது தொடர்பிலான சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்குமான வரைவுகளைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்றுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமூக ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் இது பொருந்துமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

## அறிவித்தது ஆணைக்குழு

ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்திருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மீண்டும் ஒத்திவைக்க தேர்தல் ஆணைக்குழு நேற்று (11) தீர்மானித்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக தேர்தலை ஒத்திவைக்க தீர்மானித்ததாக ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தும் புதிய திகதி, அவசியமான நிதி கிடைக்கப்பெற்றவுடன் அல்லது உயர் நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் அறிவிக்கப்படுமென தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயங்கள் இரண்டில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுமிடத்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மேற்கொள்வார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நிலக்கரி கப்பல் மே மாதம் நாட்டுக்கு

*கே. சுபானி*

நிலக்கரியுடன் கூடிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி புத்தளத்தை வந்தடையவுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுரைச்சோலை லக்விஜய அனல்மின் உற்பத்தி நிலையத்தின் தேவைக்காக 29 கப்பல்களில் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது வரவிருக்கின்ற 30ஆவது நிலக்கரிக் கப்பல் எதிர்வரும் மே முதலாம் திகதி நாட்டுக்கு வருகைதரவுள்ளது.

மின்சாரசபையின் உற்பத்தி கணிப்பின்படி, இந்தப் பருவத்துக்கு 30 நிலக்கரி கப்பல்கள் தேவைப்படுகின்றன. அதில் 24 முதல் 26 கப்பல்கள் ஏலவே புத்தளத்தை வந்தடைந்துள்ளன.

இதன்படி, 'லக்விஜய' அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இப்பருவ இயக்கத்துக்குத் தேவையான அளவு நிலக்கரியை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



# திடீரென எழுந்த புத்தர் சிலையைக் காணவில்லை

## செட்டிகுளம் பொலிஸில் முறைப்பாடு

*வவுனியா செய்தியாளர்*

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புத்தரை காணவில்லையென அப்பகுதியில் தற்போது வசித்துவரும் தமிழர் ஒருவர்... 02 பக்கம்

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவு

## வொஷிங்டனில் உறுதியளித்தது உலக வங்கி

*நமது விசேட செய்தியாளர்*

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் சமூக பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது. உலக வங்கிக் குழுமம் மற்றும் சர்வதேச நாணய நிதியம்... 02 பக்கம்





# இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

**பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி**

இரண்டு அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்கள் மற்றும் புதிய தூதுவர் ஒருவரின் நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி கிடைத்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் புதிய செயலாளராக டபிள்யூ.எஸ். சத்யானந்தாவின்... 02 பக்கம்

# சு.க. மே தினக் கூட்டத்தை புறக்கணிக்கத் தீர்மானம்

## அரச ஆதரவு எம்.பிக்கள் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்படும் மே தினக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லையென அக்கட்சியிலிருந்து பிரிந்துசென்ற பாராளுமன்ற... 02 பக்கம்

# எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு



உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் நேற்று (11) கையளிக்கப்பட்டுள்ளது.

குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வினால் பிரதமர் அலுவலகத்தில் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 02 பக்கம்



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை மீளாய்வுசெய்ய ஜனாதிபதியிடம் கோரிக்கை

## கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் சட்டமூலத்துக்கு ஆதரவில்லையென்கிறது பொதுஜன பெரமுன

*நமது நிருபர்*

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை மீளாய்வுசெய்து ஜனநாயகக் கோட்பாடுகளை மீறாத வகையில் சட்டமூலமொன்றை முன்வைக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. » 02 பக்கம்

# ஒசுசல மருந்தகங்களில் 50 கோடி ரூபா நட்டம்

*கே. சுபானி*

அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 26 ஒசுசல மருந்தகங்கள் அவசியமற்ற செலவு உள்ளிட்ட இதர காரணங்களால் கடந்த 2021ஆம் ஆண்டு 50 கோடியே 32 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அறிக்கையில்... » 02 பக்கம்

**உஷ்**



ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி வரிசையில் உள்ள முக்கிய அரசியல்வாதிகள் பலர் நாட்டில் இல்லையாம்.

பலரும் வெளிநாடுகளுக்கு புறப்பட்டுள்ளதால் இம்முறை அமைச்சரவைக் கூட்டம் நடக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சித்திரை விடுமுறை நாட்களில் தேசிய வனவிலங்கு சரணாலயம் ஒன்றுக்கு சென்று தனது பொழுதுபோக்கான விலங்குகளை படம்பிடிக்கும் வேலையில் ஈடுபடவுள்ளாராம்.

# பயண ஆலோசனைகளை மீள்பரிசீலனை செய்க!

## இராஜதந்திரிகளிடம் அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை

05 பக்கம்

# மிருசுவிலில் நிலத்துக்கடியிலிருந்து 12 விக்கிரகங்கள் கண்டுபிடிப்பு

03 பக்கம்

# 3,000 வர்த்தகர்கள் மீது வழக்குத் தொடர முடிவு

*கே. சுபானி*

நுகர்வுக்கு ஒவ்வாத சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்த மூவாயிரத்து 102 வர்த்தகர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மக்கள் பாவனைக்கு ஒவ்வாத உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பிலான பரிசோதனைகள் தொடர்வதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டிகைக் காலத்தில் சுகாதாரமற்ற உணவுப் பொருட்கள்... 02 பக்கம்




எதிர்வரும் சித்திரை 14-04-2023

சோபகிருது தமிழ்ப் புதுவருட விசேட ராசி பலாபலன்கள்

தமிழன்

தினசரி பத்திரிகையில்

எதிர்வரும் 13-04-2023 திகதியும்,

குரு மாற்ற பலாபலன்கள்

13-04-2023 திகதி

வாரவெளியீட்டிலும் பிரசுரமாகவுள்ளன.

பிரதிகளை முன்கூட்டியே ஒதுக்கிக் கொள்ள, உங்கள் பகுதியிலுள்ள பத்திரிகை விற்பனை முகவரை நாடுங்கள்..

தமிழன் தமிழன்

# நுவரெலியாவில் நிர்ணய விலையில் பொருட்கள் விற்கப்படுவதில்லை

## வசந்த காலத்தைக் கொண்டாட வரும் மக்கள் குற்றச்சாட்டு

(டி.சந்ரு செ.திவாகரன்)

நுவரெலிய ஏப்ரல் மாத வசந்த காலம் ஆரம்பமாகிய நிலையில், நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்தை நோக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் படையெடுத்தவண்ணம் உள்ளனர்.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாலும் சித்திரைப் புத்தாண்டில் நீண்ட விடுமுறை காணப்படுவதனாலும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விமுறையைக் கழிப்பதற்காக வருகை தந்துள்ளனர் . வசந்த காலத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி நுவரெலியா நகர பகுதிகளிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா நகர்ப் பகுதியிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் அரசாங்கத்தால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகை விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை எனவும் விலைக்கு மேலதிகமாக பணம் அறவிடப்படுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா கிரகறி வாவி பகுதியிலும் பிரதான நகரிலும் இயங்கி வருகின்ற சில்லறை மற்றும் வசந்த கால தற்காலிக வர்த்தக நிலையங்களிலும் குறிப்பாக, ஹோட்டகளில் உணவு உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் அதிக விலைக்கே விற்பனைசெய்து வருவதாகவும் எந்தவித கட்டுப்பாட்டு விலைக்கும் பொருட்கள் விற்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக, நுவரெலியா வசந்த காலத்தினை முன்னிட்டு அமைக்கப்பட்ட தற்காலிக வியாபார நிலையங்களில் கோதுமை மாவில் செய்யப்படும் உணவுப் பொருட்கள் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் முட்டை ஒன்று 44 ரூபா முதல் 48 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், முட்டை ஓம்லெட் ஒன்று 110 ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றது. குறித்த விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டாயம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை, காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனையில் ஈடுபடும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நுவரெலியா மாநகர சபையின் விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமானிடம் வினவியபோது,

நுவரெலியா வசந்த காலத்திலும் சித்திரை புத்தாண்டுப் பண்டிகைக் காலங்களிலும் அதிக விலைக்குப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மற்றும் பொருட்களை பதுக்கி வைக்கும் வியாபாரிகள் குறித்தும் கண்டறிய விரிவான தேடுதல் நடவடிக்கையை ஆரம்பிக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு நாங்கள் அறிவித்தல் வழங்கியுள்ளோம். மேலும் மாநகர சபை மூலம் தனியான குழு மூலம் சிற்றுண்டிச்சாலைகள், ஹோட்டல்கள், வர்த்தக நிலையங்கள், மொத்தவிற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து விசேட பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். தரமற்ற அசுத்தமான உணவு வகைகளை விற்பனை செய்த நிலையங்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏப்ரல் மாதம் முழுவதும் இந்த நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தி, சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.






நுவரெலியா மாவட்ட சர்வமதக் குழு நேற்று மாலை டிக்கோயா இஸ்லாமிய பள்ளியில் இப்தார் நிகழ்வு ஒன்றை நடத்தியது. இந்நிகழ்வில் பௌத்த, இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ மத குருமார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (படப்பிடிப்பு: மஸ்கெலியா செய்தியாளர்)

# ரயில் பாதை அமைக்கும் நடவடிக்கைக்கு வவுனியாவில் மக்கள் எதிர்ப்பு







கிராமத்திற்கு செல்லும் பாதையை மறித்து அநுராதபுரம் - வவுனியா புகையிரதப் பாதை அமைக்கும் நடவடிக்கைக்கு விஜயபாகு கம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து திருத்த வேலைகளை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்று (11) இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஈரப்பெரியகுளம், விஜயபாகு கம கிராமத்தில் 50 வரையிலான குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

குறித்த கிராம மக்கள் கடந்த 32 வருடங்களாக பயன்படுத்தி வந்த வீதியை மறித்து புகையிரதப் பாதை நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறித்த கிராம மக்களை அப்பாதையிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மாற்றுப் பாதையை பயன்படுத்துமாறு புகையிரத திணைக்களத்தினர் கூறியிருந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 32 வருடங்களாக பயன்படுத்திவரும் பாதையை தாம் தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் போக்குவரத்திற்கு ஏற்றதாக புதிய தண்டவாளங்களை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் புகையிரதத் திணைக்களத்தினரிடம் கோரினர். அதற்கு அவர்கள் இணங்காமையால் புகையிரதப் பாதை அமைக்கும் பணியை தடுத்துநிறுத்தினர்.

பொலிஸார் தலையிட்டு குறித்த விடயம் தொடர்பில் புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுசென்றதுடன், அந்த மக்களின் கோரிக்கைக்கு சாதகமான பதிலை வழங்குமாறும் கோரினர்.

இதனால் அநுராதபுரம் - வவுனியா வரையிலான புகையிரதப் பாதை திருத்தப் பணிகள் ஈரப்பெரியகுளம், விஜயபாகு கம பகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, தமக்கான தீர்வு கிடைக்காவிடின் தாம் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

# அக்கரைப்பற்று நீதிமன்றத் தொகுதிக்கு தீ மூட்டியமை தொடர்பில் கைதானோருக்கு விளக்கமறியல் நீடிப்பு

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற அலுவலகக் கட்டடத் தொகுதிக்கு தீ மூட்டியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதவான் எம்.எச்.எம்.ஹம்சா முன்னிலையில் சூம் செயலி ஊடாக குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேகநபர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணையை துரிதப்படுத்துமாறு இதன்போது நீதவான் மீண்டும் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தீ பரவியிருந்தது.

இத்தீயினால் நீதிமன்றத்தின் வழக்குகளுடன் தொடர்புடைய அதிகளவிலான ஆவணங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 24 வயதான இருவரும், 18 வயதான ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒருவரிடம் பணம் பெற்றுக்கொண்டு நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு தீ வைக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### 3,000 வர்த்தகர்கள்...

விற்பனை தொடர்பில் விசேட சுற்றி வளைப்பொன்று சுகாதார அமைச்சின் கட்டளைக்கிணங்க நாடுபூராகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்படி ஏப்ரல் 10ஆம் திகதிவரை 19,107 நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுள் 3,102 வர்த்தக நிறுவனங்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தின்போது நுகர்வோருக்கு சுகாதாரமற்ற உணவுகளை விற்பனைசெய்வோர் தொடர்பில் நேற்றுமுன்தினம் குளியாப்பிட்டி பகுதியிலுள்ள பல உணவகங்கள், குளியாப்பிட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை விற்பனை செய்ய வர்த்தகர்கள் மீது வழக்கு தொடர்வதற்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

### ஒசுசல..

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒசுசல மருந்தகங்களில் இழப்பு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நூற்றுக்கு 15 தொடக்கம் 175 வரை அதகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த 2020ஆம் ஆண்டு இலாபமீட்டிருந்த இரத்தினபுரி, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை, பண்டாரகம மற்றும் மொனராகலை உள்ளிட்ட 4 ஒசுசல மருந்தகங்களிலும் கடந்த 2021ஆம் ஆண்டு நட்டமேற்பட்டுள்ளதாகவும், 9 ஒசுசல மருந்தகங்களில் 2020ஆம் ஆண்டு நூற்றுக்கு 5.7 முதல் 7,411 வீதம் இலாபம் ஈட்டப்பட்டிருந்த நிலையில், 2021ஆம் ஆண்டு அது வீழ்ச்சியடைந்துள்ளது.

கொவிட் பெருந்தொற்று காரணமாக இந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக அரச மருந்துகள் ஒழுங்குபடுத்தல் கழகம், தேசிய கணக்காய்வாளர் அலுவலகத்திடம் தெரிவித்துள்ளது.

மேலும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டு, ஒசுசல ஊழியர்களின் எண்ணிக்கையில் எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை என்றபோதிலும், நிர்வாகச் செலவு நூற்றுக்கு 10 தொடக்கம் 32 வீதம் வரை அதிகரித்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையிலுள்ள ஒசுசல நிர்வாகக் குழுவின் செலவு முன்னைய ஆண்டைவிட 2021ஆம் ஆண்டு 47 இலட்சம் ரூபா அதிகமாக இருப்பதால் குறித்த ஒசுசல நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

அத்தோடு தம்புள்ளை ஒசுசலயில் 2021ஆம் ஆண்டு 59 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டுள்ளது. ஒசுசல மருந்தகமொன்று நட்டமீட்டும் அதிக தொகை இதுவாகும்.

மருத்துவப் பொருட்களின் சேதம் மற்றும் காலாவதியானமையே மேற்படி நட்டத்துக்குக் காரணம் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### எல்லை நிர்ணயக்...

உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணயக் குழு கடந்த வருடம் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய உள்ளிட்ட நால்வர் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை எண்ணாயிரத்திலிருந்து நான்காயிரமாக குறைப்பதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இதன்படி, உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,714ஆக குறைக்கப்பட்டுள்ளது.

### திடீரென...

பொலிஸ் நிலையத்தில் நேற்று (11) முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம், பழைய புகையிரத நிலையத்திற்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் மாலையே அகற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றைய தினம் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்துக்கு வந்த நபர் ஒருவர் தானே அந்த சிலையை காணியில் வைத்ததாகவும் தற்போது அதனைக் காணவில்லை எனவும் செட்டிகுளம் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இந்த நபர் கடந்த 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நோர்வேயிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின பெண் ஒருவரை திருமணம் செய்திருந்ததுடன், கடந்த பெப்ரவரி மாதமளவில் செட்டிகுளத்துக்கு வந்து தங்கியுள்ளார். இந்நிலையிலேயே குறித்த புத்தர் சிலையை அவர் தனது காணிக்கு முன்னால் உள்ள அரச காணியில் வைத்துள்ளார்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### இரு அமைச்சுகளுக்கு...

நியமனத்துக்கு உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியது.

அத்துடன், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் புதிய செயலாளராக எம்.எம்.நைமுதீனின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். இது தவிர, பிலிப்பைன்ஸுக்கான இலங்கைத் தூதுவராக கலாநிதி சானக ஹர்ஷ தல்பஹேவாவை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி கிடைத்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டம் அண்மையில் (06) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதுடன், இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, அநுர பிரியதர்ஷன யாப்பா, (சட்டத்தரணி) தலதா அத்துகோரல மற்றும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புத்தகப் பை, காலணிகளின் விலையை உடனடியாகக் குறைக்க நடவடிக்கை

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் காலணிகளின் விலையை உடனடியாகக் குறைக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

புதிய பாடசாலை தவணை ஆரம்பமாகியுள்ள நிலையில், பிள்ளைகளுக்கு காலணிகள் மற்றும் பைகளை கொள்வனவு செய்வதில் பெற்றோர்கள் சிரமப்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைப் பைகள் மற்றும் காலணிகளின் விலைகள் தொடர்பில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது காலணி மற்றும் பைகள் இறக்குமதி முற்றாக நிறுத்தப்பட்டு உள்ளூர் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மட்டுமே இறக்குமதி செய்யப்படுகின்றன. டொலரின் பெறுமதி வீழ்ச்சிக்கேற்ப உள்ளூர் சந்தையில் பாடசாலை பைகள் மற்றும் காலணிகளின் விலை குறைக்கப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஆராய்ந்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை வழங்குமாறு வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்துக்கு இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய உத்தரவிட்டார். விலை குறையவில்லை என்றால் உடனடியாக ஜனாதிபதிக்கு அறிவித்து விலையை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சு. க. மே தின..

உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளது. அவ்வாறு மே தினக் கூட்டங்களிலோ பேரணிகளிலோ கலந்துகொள்வதில்லையென தமது அணி தீர்மானித்துள்ளதாக அரசுக்கு ஆதரவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த பொதுத் தேர்தலில் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களில் 11 பேர் அரசுக்கு ஆதரவு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடவுச்சீட்டு பெறுவோருக்கு விசேட அறிவிப்பு வெளியானது

கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவுள்ளோர் இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் சமுமூகமளிக்க வேண்டுமென குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக இன்றைய தினத்திற்கு நேரம் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம், இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னதாக திணைக்களத்திற்கு வருகை தந்து தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே முன்பதிவு செய்து நேரத்தை ஒதுக்கிக்கொள்ளாதவர்களை, தலைமை அல்லது பிராந்திய அலுவலகங்களுக்கு இன்றைய தினம் வருகை தர வேண்டாம் என குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

### பயங்கரவாத...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அக்கட்சியின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். மக்களின் அடிப்படை கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் எந்தவொரு சட்டத்துக்கும் சட்டமூலத்துக்கும் தமது கட்சி ஒருபோதும் உடன்படாதென அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தின் வரையறையானது சில வரம்புகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். கருத்து வேறுபாடுகளின் ஒவ்வொரு செயலையும் பயங்கரவாதம் என வரையறுக்கப்பட்டால் இந்தச் சட்டமூலமானது ஜனநாயக சமுதாயத்துக்கு ஏற்புடையதாக அமையாது.

ஊடகங்களில் வெளியாகும் கருத்துகளின் அடிப்படையில் சட்டமூலத்தை முன்வைக்கும் நீதி அமைச்சருக்கும் இந்தச் சட்டத்தின் மீது நம்பிக்கை இல்லை என்றே தோன்றுகிறது. இந்த சட்டமூலத்தை மறுபரிசீலனை செய்யவும் நிபுணர் குழுவை அமைத்து ஆய்வு செய்யவும் ஜனநாயகக் கோட்பாடுகளை மீறாத வகையில் சட்டமூலத்தை தாக்கல் செய்யவும் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஓர் அரசாங்கம் சட்டமூலமொன்றை அறிமுகப்படுத்தும்போது அந்தச் சட்டத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அத்தகைய நம்பிக்கை இல்லாதபட்சத்தில் சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது - என்றார்.

### பொருளாதாரத்தை...

ஆகியவற்றின் 2023ஆம் ஆண்டுக்கான வசந்தகால கூட்டத்தொடர் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் (10) ஆரம்பமாகியுள்ள நிலையில் அங்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும் உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் என்னா பியர்டுக்குமிடையே இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலானது அதன் பொருளாதார மீட்சிக்கு எவ்வாறு துணைபுரியும் என்பது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு, பணப்பரிமாற்றத் திட்டங்கள், பயனுடைய விநியோக முறைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் நிபுணத்துவம் மிக்க உலக வங்கிக் குழுவுடன் சிறந்த கலந்துரையாடலை மேற்கொண்டதாக இராஜாங்க அமைச்சர் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல், சமூகப் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான படிமுறைகள் மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்துதல் குறித்து உலக வங்கியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போதே இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக என்னா பியர்ட் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியத்தையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

எதிர்பார்த்துள்ள பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுப்பது தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# அதிகாரத்தை தக்கவைத்து கொள்ளவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கிறார்கள்

## 5,000 இலட்சம் ரூபாவுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்று பெவ்ரல் அமைப்பு வலியுறுத்து



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப் படுவதற்கு உண்மையான காரணம் நிதிப் பிரச்சினை இல்லை. அரசியல்வாதிகளின் சுயநலத்துக்காகவும் அவர்களின் அதிகாரத்தை தக்கவைத்து கொள்வதற்காகவுமே தேர்தலை காலந்தாழ்த்தி வருகிறார்கள் என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் (பெவ்ரல்) நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேலும், தேர்தலுக்காக இதுவரையில் செலவு செய்யப்பட்ட 5,000 இலட்ச ரூபாவுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது நாட்டில் நகைச்சுவையாக மாறியுள்ளது. தேர்தலுக்கான திகதி, தபால்மூல வாக்களிப்புக்கான திகதி என்பன பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டன. ஆனால், அந்த திகதிகளில் தேர்தலை நடத்துவதில் பின்னடைவை சந்தித்துள்ளோம். அதேபோன்று, மீண்டும் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியம் உருவாகியுள்ளது. திட்டமிட்டப்படி 25ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்த அரசாங்கம் ஒருபுறம் மக்களை ஏமாற்றியுள்ளதுடன் மறுபுறம், 8000 வரையிலான பிரதேச மட்டத்திலான வேட்பாளர்களை பாரதூரமான ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது.

எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் இரண்டு வருடங்களில் நடக்குமா என்ற பாரதூரமான நிச்சயமற்ற நிலைமை உருவாகியுள்ளது. அவ்வாறானவொரு நிலை உருவானால் பிரதேச மட்டத்திலான அரசியல்வாதிகளின் தலையீடு இன்றியே உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கும். தற்போதும் அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கி வருகின்றன. அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியையும் மீறியுள்ளது. இந்நிலையில் தினம் குறிப்பிடப்படாமல் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் நிதிப்பிரச்சினை உண்மையான பிரச்சினை இல்லை. அரசியல் பிரச்சினையே தாக்கம் செலுத்தியுள்ளது. தேர்தலை நடத்தினால் தமது அரசியல் பலம் இல்லாமல் போய்விடும் என்ற பயத்தின் காரணமாகவே தேர்தலை தொடர்ந்து ஒத்திவைத்து வருகிறார்கள். 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதி தொடர்பான கொடுக்கல் வாங்கல் 2017ஆம் ஆண்டே ஆரம்பமாகியிருந்தது. ஆனால், அந்த தேர்தலுக்கு முன்னர் மொத்த செலவுகளில் நூற்றுக்கு 19.15 சதவீதமே செலவு செய்துள்ளார்கள். ஒன்றரை வருடத்தில் 80.75 சதவீத நிதியே செலவு செய்யப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போதும், தேர்தலுக்கு முன்னர் 24.36 சதவீதம் நிதியே செலவிடப்பட்டுள்ளது. 75.64 சதவீத நிதி தேர்தலின் பின்னர் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, தேர்தல் நிறைவடைந்து ஒரு வருடத்துக்குள் ஏனைய செலவுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதில் நிதியே உண்மையான பிரச்சினையென்றால் அதற்காக எடுக்கவேண்டிய மாற்றுத் தீர்வுகள் இன்னும் இருக்கின்றன. இதனையே காரணங்காட்டி ஜனாதிபதித் தேர்தலையும் ஒத்திவைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அரசாங்கத்தின் சூழ்ச்சிக்கு எதிராக மக்கள் அணிதிரளாவிட்டால், தேர்தலை அரசியல்வாதிகள் தமக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்வார்கள்.

இந்த தேர்தலுக்காக மக்களின் பணத்தில் 5,000 இலட்ச ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த செலவுக்கு யார் பொறுப்பேற்பது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்றார்.

# மிருசுவிலில் நிலத்துக்கடியிலிருந்து 12 விக்கிரகங்கள் கண்டுபிடிப்பு!

## குடும்பஸ்தர் ஒருவரின் கனவில் தென்பட்டதாகவும் தகவல்





யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவரின் கனவில் வீட்டு வளாகத்தினுள் விக்கிரகங்கள் உள்ளதாக கண்டதை அடுத்து, அப்பகுதியை அகழ்ந்த போது அங்கிருந்து 12 விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மிருசுவில் பகுதியில் வசிக்கும் முத்தையா பாஸ்கரன் என்பவரின் கனவில், அவரது வீட்டு வளாகத்தினுள் தெய்வ விக்கிரகங்கள் புதைந்துள்ளதாக காட்சிகள் தோன்றியுள்ளன.

அதனையடுத்து நித்திரையால் எழுந்தவர் கனவில் கண்ட பகுதியை அகழ்ந்த போது, சிவன் விக்கிரகம், சிவலிங்கம், வராகி அம்மன் விக்கிரகம், ஆறுதலை முருகன், சிவனும் பார்வதியும் இடப வாகனத்தில் அமர்ந்திருக்கும் விக்கிரகம், ஒற்றைத்தலை நாகம் ஐந்து, ஐந்து தலை நாகம் இரண்டு ஆகிய 12 விக்கிரகங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட விக்கிரகங்களை தனது காணிக்குள்ளேயே சிறிய கொட்டகை ஒன்றினை அமைத்து, அதனுள் பிரதிஷ்டை செய்து வழிபாடு நடத்தி வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் 78 வர்த்தக நிலையங்கள் திடீர் சோதனை: 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை





வவுனியாவில் 78 வர்த்தக நிலையங்களில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட நிறுவை, அளவைப் பிரிவின் உதவி அத்தியட்சகர் எஸ்.இராஜேஸ்வரன் நேற்று (11) தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எமது அமைச்சின் உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பஸ் நிலையம், நெளுக்குளம், பசார் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள 78 வர்த்தக நிலையங்கள் மீது இந்த திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது நிறுத்தல் தராசுகள் முத்திரையிடப்பட்டுள்ளதா, நிறுத்தல் அளவைகள் சரியாக உள்ளனவா, பொதிசெய்யப்பட்ட பொருட்களின் நிறுத்தல் அளவைகள் சரியானவையா என்பது குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அதனை முறையாக செய்யாத 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆயுர்வேத உற்பத்திகளை நவீனமயப்படுத்துவது குறித்து ஆராய அமைச்சர் சிசிர கல்முனைக்கு விஜயம்

(பாறுக் ஷிஹான்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அழைப்புக்கு அமைவாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி நேற்று (11) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 03ஆம் திகதி சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆயுர்வேத உற்பத்திகளை நவீனமயப்படுத்தல் மற்றும் பாரிய ஆயுர்வேத மூலிகை தோட்டத்தை (herbal Gardening) அமைத்தல், போசனை செயற்றிட்டங்களை விரிவுபடுத்துதல், அரசாங்க மற்றும் தனியாரின் பங்களிப்புடன் (PPP) உற்பத்திகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக குறித்த செயற்றிடங்களையும் பிரேரணைகளையும் நேரடியாக பார்வையிடுவதற்காகவும் ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான செயற்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகவும் இராஜாங்க அமைச்சர் தலைமையிலான குழுவினர் பணிமனைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் பணிமனை சார்பில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதி பணிப்பாளர் எம்.பீ.ஏ.வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம். மாஹிர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.நபீல், வைத்தியர் டி.ஆர்.எஸ்.டி.எஸ்.ரஜப் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் பங்குனி மாதம்
29ஆம் நாள் புதன்கிழமை

- **மேஷம்**: தந்தையின் உடல்நிலை மற்றும் சொத்துப் பிரச்சினைகள் தலை தூக்கலாம், நண்பர்களால் சிரமங்களை அனுபவிப்பீர்கள்.
- **ரிஷபம்**: கோபத்தை அடக்கிக் கொள்வதால் பெரிய பெரிய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், மனக் கட்டுப்பாடு அவசியம்.
- **மிதுனம்**: காதல் விவகாரங்களில் சிற்சில முட்டுக்கட்டைகள் வந்து பின் தீரும், வியாபாரத்தில் அக்கறையுடன் செயல்படுங்கள்.
- **கடகம்**: நீண்ட நாள் உங்கள் கனவு இன்று பழிக்கப் போகின்றது, எதிரிகள் மண்டியிட்டு சரணாகதி அடைவார்கள்.
- **சிம்மம்**: குழந்தைகளால் செலவுகளோ அல்லது மனச் சங்கடங்களோ ஏற்படலாம், யாரையும் நம்பி ரகசியங்களை உளறிவிடாதீர்கள்.
- **கன்னி**: உறவுகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள், வாகன பயணங்களின் போது கவனம் வேண்டும்.
- **துலாம்**: பழையவற்றை அப்புறப்படுத்தி புதியவற்றை உங்களுக்காக வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள், நண்பர்கள் உதவுவார்கள்.
- **விருச்சகம்**: குடும்பத்தில் எதிர்பாராத சில குழப்பங்களால் உங்கள் அமைதி கெடலாம், தன ரீதியில் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.
- **தனுசு**: உடல், மன நலத்தை கெடுக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள், கணவன் மனைவி உறவில் சில விரிசல்கள் ஏற்படலாம்.
- **மகரம்**: தேவையற்ற பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும், பொறுமையோடு அமைதியைக் கையாளுங்கள்.
- **கும்பம்**: பெண்களால் தன இலாபங்கள் உதவிகள் உண்டு. தொழில், வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.
- **மீனம்**: தொழில் வியாபார உங்கள் பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள், இட மாற்றங்கள் ஏற்படலாம்.

**திதி** : ஷஷ்டி மு.ப.5.40 வரை பின் ஸப்தமி
**நட்சத்திரம்** : மூலம் மு.ப.11.58 வரை பின் பூராடம்
**யோகம்** : மரணயோகம் மு.ப. 11.11 வரை பின் அமிர்தசித்தம்
**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : மு.ப. 9.04 – 10.04 மணி வரை
**ராகு காலம்** : 12.04 – 1.34 மணி வரை
**எமகண்டம்** : 7.34 – 9.04 மணி வரை
**குளிகை** :10.34 – 12.04 மணி வரை
**சந்திராஷ்டமம்**: இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தன அதிர்ஷ்டம்** : ஆயிலியம், கட்டை, ரேவதி, அசுவினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்** : -----

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739











தொழில்முனைவின் ஊடாக பொருளாதார சவால்கள் மற்றும் வணிக சிக்கல்களை எதிர்கொள்வது எவ்வாறு எனும் தலைப்பில் தொழில்முனைவு சந்திப்பொன்றும் அதன்பின்னரான இப்தார் நிகழ்வும் நேற்று மாலை சிலாபம் லேடிரோஸ் வரவேற்பு மண்டபத்தில் இடம் பெற்றது.தொழிலதிபர் திலித் ஜயவீர தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் தொழிலதிபர்கள், புத்திஜீவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படப்பிடிப்பு - உடப்பு மகாதேவன்)

தமிழன் THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஏப்ரல் 12ஆம் திகதி, புதன்கிழமை

# இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லே கவனிக்க வேண்டிய விடயங்கள்!

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய வழிபாடுகள் மற்றும் தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம், பொலிஸார் ஊடாக ஏற்படுத்தப்பட்டு வரும் அச்சுறுத்தல் தொடர்பில் உரியவர்களுடன் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உறுதியளித்துள்ளார்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் மற்றும் குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள இந்திய தூதரகத்தில் நேற்று முன்தினம் (10.04.2023) நடைபெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

சந்திப்பின்போது, குருந்தூர் மலையில் சைவ சமய வழிபாடுகள் நீக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் விகாரை நிறுவப்பட்ட விடயம் தொடர்பிலும், அதனைத் தொடர்ந்து வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பிலும் இந்திய தூதருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன், எல்லையோரக் கிராமங்களில் இடம்பெறும் பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்கள குடியேற்றங்களின் விஸ்தரிப்பு தொடர்பிலும் சுட்டிக்காட்டியதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய வழிபாடுகள் மற்றும் தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம், பொலிஸார் ஊடாக ஏற்படுத்தப்பட்டு வரும் அச்சுறுத்தல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. இவை தொடர்பில் கவனம் செலுத்திய இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இவை தொடர்பில் உரியவர்களுடன் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஆலய நிர்வாகத்தினர், பௌத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்காவைச் சந்தித்தித்து வெடுக்குநாறி மலை ஆலய விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். இதன்போது, நீதிமன்ற வழக்கு முடியும் வரை இவ்விடயத்தில் தலையிட முடியாதென அமைச்சர் தெரிவித்ததாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் சைவ புராதன சின்னங்கள் அழிக்கப்படும், சூறையாடப்படும், ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்படும் இந்தக் காலகட்டத்தில் இந்த விடயத்தில் இந்தியா கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. சைவத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்பு நீண்ட வரலாற்றைக் கொண்டது என்பதால், அந்த சைவத்திற்கு இன்னல் ஏற்படும்போது அதில் தலையிட்டு ஆராய்வதற்கான தார்மீகக் கடமையும் பொறுப்பும் இந்திய தூதரகத்திற்கு உண்டு. அதற்கான உரிமையும் உண்டு என்று சொன்னால்கூட மிகையாகாது.

இந்த விடயத்தை அரசாங்க உயர்மட்டத்திற்கு கொண்டு செல்லும்போது இந்திய உயர்ஸ்தானிகர் வெறுமனே இந்த விடயத்துடன் மாத்திரம் வரையறுக்கக் கூடாது. அரசாங்கத்தின் முகவர் அமைப்புகளினால் செயற்படுகின்ற தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வன இலாகா, மகாவலி எல் வலயம் இப்படியாக அரசாங்கத்தின் முகவர் அமைப்புகள் தமிழர் பகுதிகளில் குறிப்பாக வடக்கு - கிழக்கு தாயக பிரதேசங்களில் திட்டமிட்டு நில அபகரிப்பை இது போன்ற அமைப்புகளின் ஊடாக மேற்கொள்கின்றன.

தொல்பொருள் திணைக்களத்தினால் ஏறக்குறைய 330 பிரதேசங்கள் தொல்பொருள் திணைக்களத்திற்குரிய இடங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதிலும் வடக்கு மாகாணத்தில் மட்டும் 167 இடங்கள் தொல்பொருள் திணைக்களத்திற்கு உரியவையாக பிரகடனப்படுத்தப்பட்டு அபகரிப்பு இடம்பெற்றுள்ளது. இதில் மத்திய அரசாங்கம் சம்பந்தப்படவில்லை எனக் கூற முடியாது. அரசாங்கத்தின் ஆசிகளோடும், அனுசரணையோடும் தான் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக தமிழர்கள் நம்புகின்றனர். இன்னொரு புறம் விகாரைகளை அமைத்து பௌத்த புனித பிரதேசம் என்ற பெயரில் ஏராளமான நிலங்கள் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளதுடன், தமிழர்கள் அங்கு நடமாடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஓர் இனத்தை அழிப்பதாயின் அந்த இனத்தின் மொழியையும், கலாசாரத்தையும் அழித்தாலே போதும்.

நாளடைவில் அந்த இனம் தானாகவே அழிந்துபோய்விடும் என்பது இனங்களுக்கான பொதுவிதி. அதேபோன்றுதான் 'நிலத்தை இழந்தான் தன் இனத்தை இழந்தான்' என்பதும். தமிழர்களின் மொழியையும், கலாசாரத்தையும் சீரழித்துவரும் அரசாங்கம், இன்னொருபுறம் நில அபகரிப்பிலும் மிகத்தீவிரமாக இறங்கியுள்ளது.

பலஸ்தீனர்களின் நிலத்தை ஆக்கிரமிப்பதற்கும் அதனை நிரந்தர இஸ்ரேல் தேசம் ஆக்குவதற்கும் அந்த மக்களின் நிலங்களை விலைகொடுத்தும், வலுக்கட்டாயமாகவும் வாங்கியது இஸ்ரேல். இரண்டாம் உலகப்போரின் முடிவில் தொடங்கிய இஸ்ரேலின் இந்த நிலக் கொள்முதல் நடவடிக்கை, 20 வருடங்களுக்குள் பலஸ்தீனத்தின் 50 வீததத்திற்கும் அதிகமான நிலத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள முடிந்தது.

அதன் பின்னரான இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்புகள் மூலம் கடந்த 60 வருடங்களுக்குள் 80 வீதத்திற்கும் அதிகமான நிலத்தை பலஸ்தீனத்திடம் இருந்து பறித்து இஸ்ரேல் தனக்குச் சொந்தமாக்கிவிட்டது. என்றுமே இணையமுடியாத நிலத்தொடர்பற்ற இரு துருவங்களாக, மேற்குக்கரை என்றும் காசா என்றும் எங்கெங்கோ இரு துண்டங்களாக, தொடரும் நிலப்பறிப்புக்கும் மத்தியில் இன்னமும் இறுதி மூச்சை இழுத்துப் பிடித்தபடி பலஸ்தீனம் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

இப்படியொரு நிலையையே தமிழர் தாயகத்திலும் ஏற்படுத்த இலங்கை ஆட்சியாளர்கள் கங்கணங்கட்டி காலாகாலமாக செயற்பட்டுவருகின்றனர். வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தைத் துண்டாட ஏற்கனவே மணலாற்றை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தி வடக்கு, கிழக்கை இரு துண்டங்களாக்கியது மட்டுமல்ல, நீதிமன்றம் ஊடாகவும் வடக்கு, கிழக்கு என்றுமே இணைய முடியாத பிரதேசங்களாக சிங்கள ஆட்சியாளர்கள் மாற்றிவிட்டனர். இப்போது வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ள நிலங்களையும் அரசுடமை ஆக்குவதிலும், பௌத்த புனித பிரதேசங்களாக்குவதிலும் மிகத் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

தமிழர் தாயகம் எங்கும் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்பது மிகவும் வெளிப்படையாகவும் தீவிரமாகவும் நடைபெறத் தொடங்கிவிட்டது. இராணுவ வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை விழுங்குவதற்கு திட்டமிட்டுள்ள அரசாங்கம், பிரதேச சபைகள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை அரச காணிகள் என்ற போர்வையில் கையகப்படுத்தும் முதற்கட்ட நடவடிக்கையை தீவிரமாக்கியுள்ளது.

இந்த விடயங்களை கவனத்திற்கொண்டு அரசாங்கத்துடன் பேசும் சந்தர்ப்பங்களில் இவற்றை இராஜதந்திர மட்டத்தில், இராஜதந்திர மொழியில் இந்திய உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்ட வேண்டும். அதுவே தமிழர்களது எதிர்பார்ப்பு.

## இன்றைய நாளில்...

- 1832 – இலங்கையில் கட்டாய அரச சேவையை ஒழிக்கும் ஆணையை பிரித்தானிய அரசர் பிறப்பித்தார்.
- 1955 – யோனாஸ் சால்க் கண்டுபிடித்த போலியோ தடுப்பூசி பாதுகாப்பானதென அறிவிக்கப்பட்டது.
- 1981 – முதலாவது விண்கலமான கொலம்பியா ஏவப்பட்டது.
- 1983 – பிரித்தானியத் திரைப்படமான காந்தி எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்றது.
- 2007 – இந்தியா அக்னி-III என்ற தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் நடுத்தர ஏவுகணையை 3 ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு வெற்றிகரமாகப் பரிசோதித்தது.

# ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்களுக்காக ஏன் உண்மை ஆணைக்குழு இல்லை?

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின்போது கூட கண்டிராத வகையிலான அதிர்ச்சியிலும் பயங்கரத்திலும் முழு நாட்டையும் ஆழ்த்திய 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு நான்கு உயிர்த்த ஞாயிறுகள் கடந்துவிட்டன. மூன்று தேவாலயங்களிலும் மூன்று ஆடம்பர ஹோட்டல்களிலும் பத்து தற்கொலைக் குண்டுதாரிகளினால் ஏக காலத்தில் ஒருங்கிசைவான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 272 பேர் கொல்லப்பட்டதுடன், 500க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். இவர்களில் முழுக் குடும்பங்களும் பெற்றோருடன் பிள்ளைகளும் இலங்கையின் அன்பையும் நட்பிணக்கத்தையும் அனுபவிக்க வந்த வெளிநாட்டவர்களும் அடங்குவர்.

இரு மாதங்களாக நாடு முடங்கிப்போய்க் கிடந்தது. அப்போது பரவிய வதந்திகளால் பீதியடைந்த மக்கள் சந்தடிமிக்க பகுதிகளுக்கு வரத் தயங்கினர். உள்நாட்டில் முன்னைய முரண்நிலை வரலாற்றைக் கொண்டிராத



ஒரு சிறுபான்மை மதக்குழு இன்னொரு சிறுபான்மை மதக்குழுவுக்கு எதிராக மேற்கொண்ட அந்த குண்டுத் தாக்குதல்களுக்கு எந்தவிதமான தர்க்க நியாயமும் கிடையாது. இந்த தாக்குதல்கள் ஒரு தசாப்தத்துக்கு முன்னர் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பிறகு முன்னெடுக்கப்பட்ட நல்லிணக்கப் பணிகள் அனைத்தையும் கெடுத்துவிட்டன.

குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு நிலவிய குழப்பநிலை மற்றும் ஊகங்களுக்கு மத்தியில் முழு நாடும் அச்சத்தில் உறைந்திருந்தது. ஆனால், சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அத்தகைய அச்ச உணர்வை வெளிக்காட்டவில்லை. தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு அவலம் நிறைந்ததாக காட்சி தந்த இடங்களுக்கு முதலில் வந்தவர்களில் ஒருவர் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அப்போது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் விருப்பத்தைக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சியிலிருந்து அந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு மிகவும் பொருத்தமான வேட்பாளர் என்று உடனடியாகவே தன்னை அறிவித்ததை காணக்கூடியதாக இருந்தது.

ஒரு தசாப்தத்துக்கு முன்னதாக விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்ததைப் போன்று தேசிய பாதுகாப்பை மீண்டும் நிலைநாட்டுவதாக அவர் உறுதியளித்தார். பீதியில் வாழ்ந்துகொண்டிருந்த நாட்டு மக்கள் மத்தியில் அவரது உறுதிமொழி எடுபட்டது. 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் அவரை ஒரு மிகப்பெரிய பெரும்பான்மை வாக்குகளால் தெரிவுசெய்தனர்.

ஆனால், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளின் கீழான அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்ற உண்மையை வெளிப்படுத்தவில்லை. இதுவரையில் அது விடயத்தில் உயர்நீதிமன்றம் மாத்திரமே சிறந்த பணியை செய்திருக்கிறது எனலாம். சட்டரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் உகந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படாத நிலையில், கத்தோலிக்க திருச்சபையும் வேறு குடிமக்களும் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கொன்றை அடுத்தே அது நடந்தது.

விசாரணை அறிக்கைகளை பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும் நான்கு சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளும் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் மூலம் பொறுப்பை அலட்சியம் செய்ததாக அவர்களை குற்றவாளிகளாகக் கண்டது. அவர்களுக்கு எதிராக கோடிக்கணக்கான ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால், குண்டுத்தாக்குதல்களின் பின்னணியில் இருந்திருக்கக்கூடிய சூத்திரதாரிகளை உயர்நீதிமன்றம் அடையாளம் காணவில்லை. அதனால் உண்மையை கண்டறிவதற்கான தேடுதல் தொடர்கிறது.

இதுவரையான அரசாங்க விசாரணைகள் திருப்தியானவையாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவும் அமையவில்லை என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் அண்மையில் ஊடக நேர்காணல் ஒன்றில் தெரிவித்தார். "உத்தியோகபூர்வ நீதி வழிமுறைகள் எம்மைப் பொறுத்தவரை நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், அவற்றுக்கான காரணிகள், அதில் பங்கேற்றவர்கள், சூத்திரதாரிகள் மற்றும் ஏனைய சக்திகள் தொடர்பில் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட விசாரணை ஒருபோதும் மேற்கொள்ளப்படவில்லை'' என்று அவர் சொன்னார். தற்போதைய ஜனாதிபதிக்கு சட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்கு இருப்பதால் அவர் பதவியில் இருந்து விலகியதும் எதிர்காலத்தில் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படும் என்று எச்சரிக்கை செய்த கர்தினால், ஜனாதிபதி எல்லாக் காலத்திலும் அந்த பதவியில் இருக்கப்போவதில்லை. ஆனால், கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்து இருக்கும். அவருக்கு பிறகு வருபவர்களும் நடவடிக்கைகளை தொடரவேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

### உண்மை ஆணைக்குழு

உண்மை வெளிப்படாத பட்சத்தில் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான சர்ச்சைக்கு முடிவு கிடைக்காது. சந்தேகங்கள் மாத்திரமே ஆழமாக தொடரும். கர்தினால் மல்கம் ரஞ்சித் தனது மிகவும் அண்மைய அறிக்கைகளிலும் உரைகளிலும் முன்னரை விடவும் கூடுதலான அளவுக்கு வெளிப்படையாக கருத்துகளை தெரிவித்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது. "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று இப்போது 4 வருடங்கள் கடந்துவிட்டன. இன்னமும் நீதி கிடைக்கவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியவில்லை. பல விடயங்களை ஆட்கள் பேசுகிறார்கள். நாம் நீதிக்காகவும் உண்மைக்காகவும் போராடவேண்டியது முக்கியமானதாகும். அதுதான் கிறிஸ்தவம்'' என்று அவர் கொழும்பில் உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனையில் கூறினார்.

நீதியைப் பெறுவதில் திருச்சபைக்கு இருக்கும் ஊசலாட்டமில்லாத உறுதிப்பாட்டை வெளிக்காட்டுவதற்கு அப்பால் இது 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் பெருமளவு துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுத்த கொடூரமான ஏற்பாடுகளை கொண்டிருந்தபோதிலும் கூட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை எவ்வாறு தடுக்கத் தவறியது என்பதற்கு தெளிவான ஒரு உதாரணமாகவும் விளங்குகிறது. இந்த படிப்பினையை மறந்த நிலையில், தற்போதைய அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் மிகவும் மோசமான பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஒன்றை முன்வைத்திருப்பது வேதனைக்குரியதாகும்.

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின்போது நடந்தவற்றை ஆராய்ந்து தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்கு உண்மை ஆணைக்குழுவொன்றை அமைக்கப்போவதாக அரசாங்கம் செய்திருக்கும் அறிவிப்பு இந்த குண்டுத் தாக்குதல்களை கையாளப் போவதில்லை. பதிலாக 1983 ஜூலை 24 தொடக்கம் 2009 மே 18 வரையான காலப்பகுதியையே உத்தேச ஆணைக்குழு ஆராயவிருக்கிறது. விளக்கமாக கூறப்படாவிட்டாலும், இது கெரில்லா போரில் தங்களது போராட்டத்தைத் தொடங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களினால் முன்னெடுக்கப்பட்ட பிரிவினைவாத கிளர்ச்சிக் காலப்பகுதியேயாகும்.

மோதலின்போது ஆட்களுக்கு அல்லது சொத்துகளுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் சேதம் அல்லது தீங்கு தொடர்பில் உண்மையான, துல்லியமான, பக்கச்சார்பற்ற, முழுமை வாய்ந்த பதிவுகளை நிறுவுவதன் மூலம் இலங்கை மக்கள் மத்தியில் தேசிய ஐக்கியம், சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவத்துடனான சகிப்புத்தன்மை, பல்வகைமையை மதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே ஆணைக்குழுவின் ஆணையாக இருக்கும்.

விசாரணைக்கான காலப்பகுதியை 1983 ஜூலை 24 க்கும் 2009 மே 18 க்கும் இடைப்பட்டதாக மட்டுப்படுத்துவது ஆணைக்குழுவின் ஆணை மட்டுப்படுத்தப்படுவதன் ஒரு அறிகுறியாகும். விடுதலைப்புலிகள் ஆதிக்கம் கொண்ட தமிழ்த் தீவிரவாத இயக்கமாக இருந்த காலப்பகுதியை மாத்திரமே ஆணைக்குழு கவனத்தில் எடுக்கும். ஆனால், போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட பெருமளவு மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. போரின் முடிவுக்குப் பின்னரான நாட்களில் பல பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் காணாமல் போயினர்.

கம்பி வேலிகளினால் சூழப்பட்ட முகாம்களில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான குடிமக்கள் ஆறு மாதங்களுக்கும் கூடுதலான காலமாக அடைத்துவைக்கப்பட்டனர். அவர்களில் பலர் காணாமல் போயினர். சிலர் அதிகாரிகளுக்கு பணத்தைக் கொடுத்து வெளியே சென்றனர். மற்றவர்கள் பாதுகாப்புப் படைகளினால் அழைத்துச் செல்லப்பட்டனர். ஆணைக்குழுவின் ஆணையின் தொடக்க திகதிக்கு முன்னதாகவே நீண்டகாலமாக இனப்பிரச்சினை இருந்து வந்தது. முடிவுத் திகதிக்கு பின்னரும் அந்தப் பிரச்சினை தொடருகிறது. அதனால் ஆணை போதுமான ஒன்றல்ல.

குறிப்பிட்ட திகதிகள் விசேடப்படுத் தப்படுவது இனப்போர் மாத்திரம்தான் உண்மை ஆணைக்குழுவினால் ஆராயப்படுமா அல்லது 1987 - 1989 காலப்பகுதியில் இடம்பெற்ற ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கிளர்ச்சியும் விசாரணை செய்யப்படுமா என்ற கேள்வியை எழுப்புகிறது. இனப்பிரச்சினையில் இருந்து வேறுபட்டதான அந்தக் கிளர்ச்சியின்போது பெரும் எண்ணிக்கையான மக்கள் உயிரிழந்தார்கள்.

உண்மை ஆணைக்குழுவின் நிபந்தனைகளும் வரைமுறைகளும் வகுக்கப்படுகின்ற செயன்முறை பகிரங்கமான ஒன்றாக இல்லாமல் பெருமளவுக்கு இரகசியமானதாக இருப்பது சந்தேகங்களை கிளப்புகிறது. ஆனால், உதவியைப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் நாடுகின்ற தென்னாபிரிக்காவில் நடந்தது முற்றிலும் வேறுபட்டதாகும். தனது நோக்கங்கள் எவை என்பதை எதிர்வரும் நாட்களில் அரசாங்கம் தெரியப்படுத்தக்கூடும். ஆனால், தற்போதைக்கு அது இந்த செயன்முறையை தொடர்வதற்கு தீர்மானித்திருக்கிறது போன்று தெரிகிறது.

### ஜனாதிபதியின் உறுதிமொழி

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களும் அவற்றின் விளைவுகளும் உத்தேச உண்மை ஆணைக்குழுவின் ஆணையின் அங்கமாக இருக்கப்போவதில்லை என்பது தெளிவானது. அந்த ஆணை போரின் கடைசித் திகதியான 2009 மே 18 வரை மாத்திரமே நீட்டிக்கப்படும். இந்த குண்டுத் தாக்குதல்கள் போர் முடிவுக்கு வந்து ஒரு தசாப்த காலத்துக்கு பிறகு இடம்பெற்றதை காரணம் காட்டி அவற்றை ஆணைக்குழுவின் ஆணைக்குள் உள்ளடக்காதமைக்கு நியாயம் கற்பிக்கப்படலாம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், மிகவும் நீண்டகாலமாக தொடர்ந்த போரைப் போலன்றி, தனியொரு சம்பவம் மாத்திரமே.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை உண்மை ஆணைக்குழு விசாரணை செய்யவேண்டிய தேவையை அலட்சியம் செய்ய முடியாது. ஏனென்றால், என்ன நடந்தது என்ற உண்மை தொடர்ந்து மூடி மறைக்கப்படுகிறது. அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கான நோக்கமும் அதன் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதும் இன்று வரை புதிராகவே இருந்துவருகிறது.

வழமைக்கு மாறான அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்காக கிறிஸ்தவ பக்தர்கள் பலிக்கடாவாக்கப்பட்டார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாகத்தான் உண்மையை கண்டறிந்து உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் கர்தினால் மல்கம் ரஞ்சித் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்று தோன்றுகிறது. இறந்து போனவர்களினால் நீதி கோரி குரலெழுப்பமுடியாது. அதனால் உண்மையைக் கண்டறியவேண்டியது உயிருடன் இருப்பவர்களின் கடமை. கடந்த காலத்தில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய நிகழ்வுகளை விசாரணை செய்வதற்கு உண்மை ஆணைக்குழுக்களுக்கு உலகளாவ முக்கியத்துவம் கொடுக்கப்படுவதற்கான காரணங்களில் இது ஒன்று.

பொறுப்புக்கூறலுக்கும் நீதிக்குமாக ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு பதிலாக அரசாங்க தலைவர்கள் இதுவரை இந்தத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறுவதை உறுதிசெய்வதில் கொஞ்சமேனும் அக்கறை காட்டவில்லை. துரதிர்ஷ்டவசமாக இது தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தவரையிலும் கூட வேறுபட்டதாக இல்லை. பொருளாதார நெருக்கடி எவ்வாறு உருவானது என்பதை ஆராய்ந்து அந்த நெருக்கடியை கையாளத் தவறிய அரசாங்கத்தின் தவறுகளுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. பொருளாதாரத்தை சீர்குலைத்தவர்கள் தொடர்ந்தும் அதிகாரப் பதவிகளில் இருக்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு செய்தியை நோக்கும்போது கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் உணர்வுகளை அவர் நன்கு புரிந்துகொண்டு சாந்தப்படுத்த முயற்சித்திருக்கிறார் என்று தெளிவாக தெரிகிறது. "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விளைவாக ஏற்பட்ட கடுமையான வேதனையை நான் நன்கு அறிவேன். அந்த வேதனையை நான் பகிர்ந்துகொள்கிறேன். அந்த கொடுமையான சம்பவத்துடன் தொடர்புபட்ட சட்ட செயன்முறைகள் எந்த விதமான செல்வாக்கிற்கும் உட்படாத முறையில் சுதந்திரமாகவும் பக்கச்சார்பு இல்லாமலும் முன்னெடுக்கப்படும் என்று நான் உறுதி கூறுகிறேன். பாதிக்கப்பட்ட சகலருக்கும் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை வேலைகள் மற்றும் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைப் போன்ற நீசத்தனமான செயல்கள் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதன் மூலம் எமது நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் எந்தவிதமான தடுமாற்றமும் இல்லாத பற்றுறுதியை நான் கொண்டிருக்கிறேன்'' என்று ஜனாதிபதி செய்தியில் கூறினார்.

தனது இந்த பற்றுறுதியை மீளவும் உறுதிப்படுத்தியதற்கு மேலதிகமாக ஜனாதிபதி கடந்த காலத்தில் கிரிமினல் குற்றங்களாக இருந்தாலென்ன, பொருளாதாரக் குற்றங்களாக இருந்தாலென்ன, அவற்றை செய்தவர்களை உயர் பதவிகளில் இருந்து விலக்குவதன் மூலம் தனது நம்பகத்தன்மையை வலுப்படுத்திக் கொள்ளமுடியும்.



கலாநிதி ஜெகான் பெரேரா



# 13ஆவது திருத்தம் - பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

## நாடுகளின் பயண ஆலோசனைகளை மறுபரிசீலனை செய்யுமாறு அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை







அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலும் இதுதொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி கொழும்பிலுள்ள இராஜதந்திர குழுவினருக்கு விளக்கமளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் கொழும்பிலுள்ள இராஜதந்திர குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று, நேற்று முன்தினம் (10) கொழும்பில இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பில் இதன்போது விளக்கமளித்துள்ளதுடன், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதியின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்டோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்கள்.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர்,

பொருளாதார மீட்சிக்காக இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு சர்வதேச சமூகத்திற்கு நன்றி தெரிவித்ததோடு, அதன் முன்னேற்றம் குறித்தும் விளக்கமளித்துள்ளார். சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் ஊக்குவித்து நாட்டின் ஸ்திரத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில், நாடுகளின் பயண ஆலோசனைகளை மறுபரிசீலனை செய்யுமாறும் அவர் கோரியுள்ளார்.

2022 டிசெம்பர் மற்றும் 2023 ஜனவரியில் ஜனாதிபதியால் சர்வகட்சி மாநாட்டை கூட்டுவது மற்றும் ஜனாதிபதி தலைமையில் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பது உள்ளிட்ட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளையும் அமைச்சர் எடுத்துரைத்துள்ளார்.

13ஆவது திருத்தம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் அவர் விளக்கமளித்துள்ளார். உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையை அமைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்த புதுப்பிப்பை தெளிவுபடுத்தியுள்ளதுடன், நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (TRC) ஆய்வு செய்வதற்காக மார்ச் மாதத்தில் பணிபுரியும் விஜயத்தை எளிதாக்கிய தென்னாபிரிக்க அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவளை, இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க,

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் திட்டங்களின் பின்னணியில் அரசாங்கத்தின் கட்டமைப்பு சீர்திருத்த செயல்முறைகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 52ஆவது அமர்வுகளின் கீழ் 6ஆவது காலமுறை மீளாய்வான யுனிவர்சல் பீரியொடிக் மீளாய்வின் 4ஆவது சுழற்சியில் இலங்கையின் சமீபத்திய பங்கேற்பு உட்பட ஐ.நா. பொறிமுறைகளுடன் இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை வெளிவிவகார செயலாளர் விஜேவர்தன கோடிட்டுக் காட்டினார். மனித உரிமைகள் சபையின் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் அகற்றுவதற்கான குழுவிடம் இலங்கை தனது 9ஆவது கால அறிக்கையை சமர்ப்பித்ததுடன், தொடர்புடைய பங்குதாரர்களிடையே ஆலோசனை செயல் முறையைத் தொடங்கியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், அண்மையில் நிறுவப்பட்ட வெளிநாட்டு இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகம் உட்பட வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுடன் முன்னெச்சரிக்கையுடன் ஈடுபடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து வெளிவிவகார செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த இராஜதந்திர குழு உறுப்பினர்கள்,

முதலீட்டு ஊக்குவிப்பு, நல்லிணக்கம், நல்லாட்சி மற்றும் ஊழலுக்கு எதிரான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இலங்கையின் தொடர்புடைய அபிவிருத்திகள் குறித்து இராஜதந்திர குழுவினருக்கு தொடர்ந்து விளக்கங்களை வழங்கியதற்காக அமைச்சர் சப்ரிக்கு நன்றி தெரிவித்தனர்.

# மின்சார வேலியில் சிக்கி இளைஞன் உயிரிழப்பு



வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் யானை வேலி மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் தொடர் யானைகள், பன்றிகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்குள்ள தோட்டக் காணி ஒன்றுக்கு யானை வேலி போடப்பட்டிருந்தது.

குறித்த வேலிக்கு மின்சாரம் வழங்கப் பட்டிருந்த நிலையில் அதனை அவதானிக்காது குறித்த வேலி ஊடாக நேற்று முன்தினம் (10) இளைஞன் ஒருவர் பயணித்துள்ளார்.

இதன்போது யானைக்கு வைத்த மின்சார வேலியில் சிக்கி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கனராயன்குளம், குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய உலகநாதன் கஜந்தன் என்பராவார். இது தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கல்வித்துறை மரணப் பொறியில்!

## நவீனத்துவம் அவசியமென்கிறார் சஜித்



தற்போதைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு, நாட்டின் கல்வியை நவீனப்படுத்தாத அவலத்தை ஒரு நாடாக நாம் அனுபவித்து வருகிறோம். இந்த நிலைமை ஒருவகையில் கல்வியின் மரணப் பொறியாக மாறியுள்ளது - என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டின் கல்வியை புதுப்பிப்பிப்பதற்கும் நவீனத்துவ சூழலுக்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி வகுத்துள்ளதாக தெரிவித்த அவர், உலகின் மிக நவீன மற்றும் மேம்பட்ட கல்விமுறைகளுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

நாட்டின் உயிர்நாடியாகக் கருதப்படும் சிறுவர் தலைமுறையை அறிவு, திறமை மற்றும் வசதிகளுடன் பூரணப்படுத்துவது தார்மீக பொறுப்பு என்று நம்பி அதற்கான நிலையான நோக்கை முன்நோக்காகக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் எண்ணக்கருவுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் சக்வல (பிரபஞ்சம்) வேலைத்திட்டத்தின் பாடசாலை வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் திறை மற்றும் கணினி உபகரணங்களை அன்பளிப்புச் செய்யும் பிரிவின் 29ஆவது கட்டமாக 9,24,000 ரூபா பெறுமதியான வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களும் ஹொரவப்பொத்தானை வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு நேற்று (11) கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 10,000இற்கும் அதிகமான பாடசாலைகளை ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவதே எமது ஒரேநோக்கமாகும். இதற்காக மேற்கொள்ள முடியுமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். பல பாகுபாடுகள் காணப்படுகின்றன. மதங்கள், இனங்கள், பணக்காரர்கள், ஏழைகள், இயலுமையுள்ளவர்கள், இயலுமையற்றவர்கள் என பல்வேறு வகைகளில் பிரிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பேருவளையில் விசேட கலை கலாசார நிகழ்ச்சி





(பீ.எம் முக்தார்)

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பேருவளையில் சிங்கள முஸ்லிம் இன உறவை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் விசேட புத்தாண்டு பாரம்பரிய கலை கலாசார நிகழ்ச்சியொன்று நேற்று பேருவளை மங்கள பிரிவன விகாரையில் நடைபெற்றது.

பேராதனை பல்கலைக்கழக புவியியல் பிரிவின் பேராசிரியரும் மங்கள பிரிவன விகாரையின் அதிபதியுமான சங்கைக்குரிய பின்னவல சங்கசுமன தேரர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீ அமரவன்ச தர்ம பாடசாலை சிறார்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு பேருவளை பகுதி அஹதிய்யா பாடசாலை, அரபுக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் இதில் பங்குபற்றினர்.

சித்திரைப் புத்தாண்டையொட்டி கலாசார நல்லிணக்கத்தை இரு சமூகங்களுக்கு மத்தியில் பரிமாறிக்கொள்ளும் நோக்குடன் இந்த நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது.

பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார, பேருவளை பொலிஸ் நிலைய ஆலோசகர் எம்.இக்பால் ஸம்சுதீன், களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் எம்.எச்.எம்.உவைன் ஹாஜியார் மற்றும் அதன் முக்கியஸ்தர்கள், அஹதிய்யா பாடசாலை அதிபர்கள், போதன ஆசிரியர்கள், மாணவர்கள், ஸ்ரீ அமரவன்ச தர்ம பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொலிஸ் நிலைய அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு கமிட்டி உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் பின்னவல சங்க சுமன தேரர் கூறியதாவது, பேருவளையில் சிங்கள முஸ்லிம் மக்கள் புரிந்துணர்வோடு மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இந்த இன நல்லுறவை தொடர்ந்து கட்டியெழுப்புவதோடு பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடன் சித்திரைப் புத்தாண்டு நிகழ்ச்சி முஸ்லிம் சகோதரர்களின் பங்குபற்றலோடு இந்த விகாரையில் இடம்பெறுகிறது. புனித ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றவர்களாக இந்த நிகழ்வில் முஸ்லிம்கள் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எமது சமயப் பாடசாலை சிறார்கள் சுமார் 100 பேர் உட்பட ஆசிரியர்கள், மதகுருமார்கள் எதிர்வரும் 16ஆம் திகதி கெச்சிமலை தர்கா வளவில் நடைபெறும் இன நல்லுறவு ஒன்றுகூடலில் பங்குபற்றுகின்றனர் - என்றார்.

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் எம்.எச்.எம். உவைன் ஹாஜியார் பேசும்போது பேருவளை சிவில் பாதுகாப்பு கமிட்டியின் சிபாரிசின்பேரில் இந்த விகாரையில் இவ்வாறானதொரு நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

இனத்தாலும் மதத்தாலும் மொழியாலும் கலாசாரத்தினாலும் நாம் வேறுபட்டபோதிலும் அனைவரும் இலங்கையர்களே. இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு மிக அவசியம் பௌத்த விகாரையில் என்ன நடக்கிறது என்பதை முஸ்லிம்களும், பள்ளிவாசல்களில் என்ன நடக்கிறது என்பதை பெரும்பான்மை சமூகத்தினரும் நன்கு அறிந்துகொள்ள இவ்வாறான நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானதாகும். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மங்கள பிரிவன அதிபதி உட்பட ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூறுகிறேன் - என்றார்.

சீனன்கோட்டை ஜம்மியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீடம், அஸ்ஸலாஹ் அரபிக் கல்லூரி, கெச்சிமலை அல்-அஷ்ரபிய்யா அரபிக் கல்லூரி மற்றும் பேருவளை பகுதியிலுள்ள எல்லா அஹதிய்யா பாடசாலை அதிபர்கள், பங்குபற்றிய பிரமுகர்களுக்கு புத்தாண்டு பலகாரமும் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# வட மாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான இசை போட்டி எதிர்வரும் 15இல்




வடமாகாண மாற்றுத்திறனாளிகளின் இசை திறமையை வெளிக்கொண்டுவரும் முகமாக, முதல்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கான மாபெரும் இசை போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இது தெரிவிக்கப் பட்டுள்ளது.

சாவிகா சங்கீத அறிவாலயத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் குறித்த இசை போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கெடுக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் போட்டி இடம்பெறுகின்ற தினத்தில் காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரையான காலப்பகுதியில் போட்டி இடம்பெறும் மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். போட்டியாளர்கள் தனிப்பாடல், தனிவாத்திய இசைக்கே அனுமதிக்கப் படுவர்.

போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான ஏதாவது ஒரு பாடலை (கர்நாடக சங்கீதம்/ திரையிசை/மேலைத்தேயம்) 6 நிமிடங்களுக்குள் பாட இசைக்க முடியும். வாத்தியம் இசைப்போர் குறித்த வாத்தியக்கருவியை கொண்டுவருதல் வேண்டும். போட்டி நிறைவுறும்வரை பாதுகாவலர் போட்டியாளருடன் இருக்கவேண்டும். இப்போட்டி களில் அனைத்துவிதமான மாற்றுத் திறனாளிகளும் வயது வேறுபாடின்றி பங்கெடுக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கிலியை அறுத்துச்சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

பெண்ணொருவரின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்தெடுத்துச் சென்ற சம்பவமொன்று பத்தரமுல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பதிவாகியிருந்தது. இந்தச் சம்பவத்துடன் சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் தலங்கம பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் கறுவாத்தோட்டம் பொலிஸ், புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றி வந்தவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தலங்கம போக்குவரத்துப் பொலிஸாரினாலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சந்தேகநபரால் அறுத்துச்செல்லப்பட்ட சங்கிலி போலி சங்கிலி (imitation) என்பது பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கட்கிழமை 2023.04.10
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| மஹஜன சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 5086 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 15,415,856.00 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 5 5 6 7 |

| கொவிசெத (Govisetha) | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 3328 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 96,013,137.44 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 03 23 24 70 |

| ஜாதிக சம்பத | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1541 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 12,052,291.60 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 7 9 8 7 5 1 |

| தன நிதானய | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1116 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 85,871,990.80 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 24 43 |

| ராசி சுப பலன் (Handahana) | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 395 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,500,000.00 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 30 33 46 |
| விசேட இலக்கினம் | ரிஷபம் |

| மெகா பவர் | |
|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 1434 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 314,298,178.00 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 02 30 65 69 |
| அடுத்த பவர் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |
| அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு | ரூ. 10,000,000.00 |







ஹாசிம் உமர் பௌண்டேசன் நடத்திய இப்தார் நிகழ்வு கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஹாசிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அரச மற்றும் தனியார் துறைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க உரை நிகழ்த்தியதுடன், சீட்டிழுப்பினூடாக தெரிவான ஆறு பேருக்கு பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டன.

# மலையக மக்களுக்காக பேண்தகு அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில்

## பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் தெரிவிப்பு



நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளருமான ஜீவன் தொண்டமானின் எண்ணக்கருவுக்கமைய தேசிய மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியோடு மலையக மக்களின் நிலைப் பேண்தகு அபிவிருத்தித் திட்டங்கள் பல அமுல்படுத்தப்படவுள்ளதாக பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திற்கும், சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனத்திற்கும் இடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி தனம் சேனாதிராஜா மற்றும் இரு நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு எதிர்நோக்கி உள்ள பொருளாதார சிக்கல்களில் இருந்து மீண்டெழ பல நாட்டு தூதரகங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் உதவிக் கரங்களை நீட்டி வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மலையகம் எங்கும் தனது சேவைகளை தொடர சர்வதேச நிறுவனமான வேர்ல்ட் விஷன் நிறுவனம் கைகோர்த்துள்ளது.

உணவுத் தட்டுப்பாடு, சுத்தமான குடிநீர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தி பல வேலைத்திட்டங்கள் நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

பல் தேசிய மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களின் உதவியுடன் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுக்கு அமைவாக பல வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுக்க உள்ளோம் என பாரத் அருள்சாமி மேலும் தெரிவித்துள்ளார்.

# அப்பியாசக் கொப்பிகள் நானுஓயாவில் பகிர்ந்தளிப்பு



(செ.திவாகரன்)

நானுஓயா டெஸ்போட் கீழ்ப்பிரிவில் 'இலங்கை எங்கள் தாய் நாடு - மலையகம் எமது தாயகம்' என்ற சமூக நல அமைப்பின் 197ஆவது வேலைத்திட்டமாக பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு டெஸ்போட் தோட்ட ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

இதன்போது நானுஓயா டெஸ்போட் தோட்டத்தில் உள்ள 60 தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# டெஸ்போட் ஆலயத்தில் வருடாந்த தேர்த்திருவிழா

(செ.திவாகரன்)

நானுஓயா டெஸ்போட் கீழ்ப்பிரிவு ஸ்ரீகருமாரியம்மன் ஆலயத்தில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

வருடாந்த உற்சவம் நேற்றுக்காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானதுடன் மாலையில் வேட்டைத் திருவிழாவும் கரகம் பாலித்தலும் நடைபெற்றது.

தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் இன்று காலை வசந்த மண்டப பூஜை வழிபாடுகளும், அதனை தொடர்ந்து தேர் வீதி உலாவும் இடம்பெறவுள்ளது.

நாளை 13ஆம் திகதி வியாழக்கிழமை பறவைக்காவடி, பால்குட பவனி, மகேஸ்வர பூஜை நடைபெற்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து மறுநாள் வெள்ளிக்கிழமை சித்திரை புத்தாண்டு விசேட பூஜை இடம்பெற்று மாலை மாவிளக்கு பூஜை, பூங்காவனத் திருவிழா நடைபெறவுள்ளது.

இறுதி நாள் (15)ஆம் திகதி சனிக்கிழமை காலை கரகம் வெளிவீதி உலா இடம்பெறவுள்ளதுடன் பிற்பகல் தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் நடைபெற்று வைரவ பூஜையுடன் உற்சவம் நிறைவுபெறவுள்ளது.



**நோன்புப் பெருநாளை முன்னிட்டு இப்தார் நிகழ்வு ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

***(படப்பிடிப்பு: மனூர சுதத் செல்லஹேவா)***





# அச்சுவேலி நெசவுசாலையை ஆக்கிரமித்துள்ள மத சபையை வெளியேறுமாறு கோரி போராட்டம்










(யாழ். நிருபர்)

அரசுக்குச் சொந்தமான அச்சுவேலி நெசவுசாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதப்பிரிவினரே வெளியேறுங்கள் - எனக்கோரி போராட்டமொன்று அச்சுவேலி நெசவுசாலை முன்றலில் நேற்று (11) செவ்வாய்க்கிழமை சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நெசவுசாலை யுத்தத்தின் பின் இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் குறித்த கட்டிடத்தில் மதஸ்தலமொன்று அமைக்கப்பட்டு பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. குறித்த மதஸ்தலத்தினால் சுற்றுச்சூழலில் அதிகளவு சத்தம் போட்டு பிரார்த்தனை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதன் காரணமாக மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மதஸ்தலத்திற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது குறித்த மதஸ்தலம் அமைந்துள்ள நெசவுசாலையை மீளவும் கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து நடத்தவேண்டும் என்றும், சுற்றுச்சூழலில் இடம்பெறும் ஒலி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அமைந்துள்ள மதஸ்தலம் அகற்றப்படவேண்டும் என்றும் கோரி போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், அச்சுவேலி போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் வீதியோரத்தில் பந்தல் அமைத்து தொடர்ந்து போராடத் தயாரானபோது அதற்கு அச்சுவேலி பொலிஸார் அனுமதி மறுத்தமையால் அங்கு குழப்ப நிலை தோன்றியது.

இந்நிலையில், தனியார் காணிக்குள் பந்தல் அமைத்து போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. அங்கு வருகைதந்த அச்சுவேலி பொலிஸார் அவ்வாறு செய்ய முடியாதென தெரிவித்ததுடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் விபரங்களை சேகரித்தனர்.

இந்நிலையில், தனியார் காணிக்குள் பந்தல் அமைத்து தொடர்ந்து போராட்டக்காரர்கள் தமது போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

"அடாவடி செய்யும் மதப்பிரிவே வெளியேறு, ஊடகங்களை அச்சுறுத்தாதே, இளைஞர்களின் தொழில்வாய்ப்பைப் பறிக்காதே, பொதுமக்கள் சொத்தில் மதம் வளர்க்காதே'' போன்ற பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தாங்கியுள்ளனர்.

# யாழில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்திய

## 15 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



(யாழ் நிருபர்)

யாழ். மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணத்திலுள்ள பல வியாபார நிலையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் வியாபாரிகளினால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளைப் பரிசோதித்தபோது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்திய 15 வியாபாரிகள் இனங்காணப் பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது.

# ஆவரங்காலில் மோட்டார்சைக்கிள் திருட்டு

(வட்டுக்கோட்டை நிருபர்)

ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்துக்கு முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த HT - 5084 இலக்கமுடைய நீல நிற Honda suppercup 90 வகை மோட்டார்சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (10) ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்திற்கு முன்பாக நிறுத்திவைத்துவிட்டு திருமணத்திற்கு சென்று திரும்பி வந்து பார்த்தபோதே குறித்த மோட்டார்சைக்கிள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. முற்பகல் 10.30 தொடக்கம் 12.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்திலேயே மோட்டார்சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டு தொடர்பாக உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மோட்டார்சைக்கிள் தொடர்பான விபரம் அறிந்தவர்கள் உரிமையாளரான சு.பாலசுப்பிரமணியம் 0777655527 என்பவரது இலக்கத்திற்கோ அல்லது அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்க முடியும்.

அண்மைக்காலங்களில் யாழ். குடாநாட்டில் மோட்டார்சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாடியினால் ஒரு கிலோமீற்றர் தூரம் வாகனத்தை இழுத்து சாகசம் நிகழ்த்திய 59 வயது நபர்

(சாவகச்சேரி நிருபர்)



தென்மராட்சி - மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 59 வயதான திருச்செல்வம் என்ற நபர் தனது முகத் தாடியின் பலத்தை மாத்திரம் பிரயோகித்து ஒரு கிலோமீற்றர் தூரம் பட்டா வாகனத்தை இழுத்து சாகசம் நிகழ்த்தியுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் (10) திங்கட்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு தனது சாகசப் பயணத்தை மட்டுவில் சந்திரபுரம் சிவன் கோவிலடிக்கு அண்மையில் ஆரம்பித்து பிற்பகல் 5.30 மணியளவில் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் தனது பயணத்தை நிறைவுசெய்திருந்தார்.

இதன்போது வீதிகளில் ஏற்றம், இறக்கம் என பல தடைகளையும் தாண்டி அவர் தனது சாகசப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

இதுவரைகாலமும் மேற்படி நபர் தனது தலைமுடியின் உதவியுடன் வாகனத்தை இழுத்து சாகசம் புரிந்துவந்த நிலையில் முதன்முறையாக தாடியின் உதவியுடன் பட்டா வாகனத்தை இழுத்து வெற்றிகண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# எரிபொருள் பவுசர் மோதி மரபுரிமைச் சின்னம் சேதம்



சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் ஏ-9 பிரதான வீதியில், நுணாவில் 190ஆம் கட்டைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி மீது எரிபொருள் பவுசர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தினால் தொல்பொருள் திணைக்களத்தினால் மரபுரிமை சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த பாரம்பரிய சுமைதாங்கி முற்றாக அழிவடைந்துள்ளது.

இவ்விடத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்ட சுமைதாங்கி, இளைப்பாறும் மடம், குடிநீர்க்கிணறு என்பன காணப்படுகின்றன.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் அப்பகுதியிலிருந்து பொலிஸாரால் கொண்டுசெல்வதற்கு முன்னரேயே விபத்தினால் இடிந்த சுமைதாங்கி கற்களை சுமைதாங்கி ஒன்று அவ்விடத்தில் இருந்ததற்கான அடையாளமே தெரியாமல் பொலிஸார் முன்னிலையிலேயே அகற்றியமை அப்பகுதி மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியளவில் குறித்த இடிந்த கற்களை பொதுமக்கள், பொலிஸார் முன்னிலையில் குறித்த நபர் அள்ளிச் சென்றுள்ளார். இது தொடர்பாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகரசபைக்கு உடனடியாக அறிவித்தும் குறித்த இடத்திற்கு சம்பந்தப்பட்ட எவரும் வருகை தரவில்லை. இந்நிலையில், அப்பகுதி இளைஞர்கள் முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மூலமாக தொல்பொருள் திணைக்களத்திறகு அறிவித்ததையடுத்து குறித்த திணைக்களத்தினர் உடனடியாக அப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

# விசேட புகையிரத சேவைகளுக்கான சாரதிகளுக்குத் தட்டுப்பாடு!

## ஒருசில நாளாந்த போக்குவரத்துகளை இரத்துசெய்துவிட்டு மனிதவள இடைவெளியை நிவர்த்திக்க திட்டமிட்டுள்ளதாக திணைக்களம் அறிவிப்பு




தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள விசேட புகையிரத சேவைகளுக்கு தேவையான சாரதிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அதற்கப்பால் புகையிரத சேவையிலிருக்கும் மனிதவள தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே, நாளாந்த புகையிரத சேவைகளில் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், ஒருசில நாளாந்த புகையிரத சேவைகளை இரத்துசெய்துவிட்டு அனுபவம் வாய்ந்த சாரதிகளை தூர பிரதேசங்களுக்கான விசேட போக்குவரத்து சேவைக்கு இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக மேலதிக புகையிரத பொது முகாமையாளர் வீ.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார்.

மேலும், களுத்துறையில் அண்மையில் புகையிரதம் தடம்புரண்டமைக்கான உறுதியான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் (10) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளமையால் புகையிரதத்தில் பயணிப்பதால் பயணிகள் பாரிய நன்மையடைகிறார்கள். திணைக்களத்திலிருக்கும் மனித வளம் இந்த விடயத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும். போக்குவரத்துப் பணியாளர்களிலும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த விடயங்களை கவனத்திற்கொள்ளும்போது எமக்கு இருக்கும் வளங்கள் தொடர்பில் கலந்துரையாடி, எவ்வாறு முறையான உயர்ந்த சேவையைப் பெற்றுக்கொடுப்பது என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமையவே, இந்த புத்தாண்டு காலப்பகுதியில் விசேட புகையிரத சேவைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

அதற்கமைய, பணியாளர்களுக்குத் தேவையான உணவு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், புகையிரத தொழிற்பாட்டாளர்களுக்காக உணவுகளை விநியோகித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதுதொடர்பில் கவனம் செலுத்தும் முறையான சேவையை வழங்க வேலைத்திட்டத்தை வகுத்திருக்கிறோம்.

புகையிரத சாரதிகளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. அதற்காக மாற்று வேலைத்திட்டங்களையும் வகுத்துள்ளோம். நாளாந்தம் சேவையில் ஈடுபடும் புகையிரதங்களில் பயணிகளின் எண்ணிக்கையில் ஓரளவு வீழச்சியை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே, நாளாந்த புகையிரத சேவைகளை ஓரளவு இரத்துசெய்துவிட்டு, நாளாந்த சேவையில் ஈடுபட்ட பணியாளர்களை தூர பிரதேசங்களுக்கான அத்தியாவசிய சேவைகளுக்கு இணைத்துள்ளது. அனுபவம் வாய்ந்த சாரதிகளை இதற்கு இணைத்துக்கொண்டு விசேட புகையிரத போக்குவரத்தை தடைசெய்யாமல் அதனை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவே திட்டமிட்டுள்ளோம்.

களுத்துறை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற புகையிரதம் தடம் புரண்ட விவகாரம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அதுதொடர்பில் இதுவரையில உறுதியான தீர்மானங்கள் எதனையும் எடுக்க முடியாத நிலைமையே நிலவுகிறது. புகையிரதம் எஞ்சினிலிருந்து எவ்வாறு அகன்றது என்பது குறித்து ஆராய்ந்து குழுவினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். எஞ்சினுக்கும் புகையிரதத்துக்கும் இடையிலான தொடுப்பு விடுபட்டமையின் காரணமாகவே இந்தத் தடம்புரள்வு இடம்பெற்றுள்ளதாகவே தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால், அதற்கு வீதியிலுள்ள குறைபாடுகளா அல்லது தொடுப்பிலிருந்த குறைபாடா என்பது தொடர்பில் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறான விபத்துகளினால் பயணிகளுக்கு ஏற்படும் ஆபத்துகள் மிகவும் குறைவாகவே இருக்கும்.

புகையிரத வீதிகளில் இருக்கும் பல்வேறு குறைபாடுகளை இனங்கண்டுள்ளோம். அதற்குக் காரணம், புகையிரத வீதிகள் உரிய காலத்தில் மறுசீரமைப்பு செய்யப்படாமையாகும். அவ்வாறான வீதிகளை மறுசீரமைப்பு செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதன் காரணமாகவே புகையிரத சேவையில் காலதாமதத்தை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. எது எவ்வாறாயினும் போக்குவரத்து சேவையை முறையாக பெற்றுக்கொடுப்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும் - என்றார்.

# ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் விசேட இப்தார் நிகழ்ச்சி





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு மாவட்ட மஸ்ஜிதுகள் சம்மேளனமும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் நம்பிக்கையாளர் சபையுடன் இணைந்து சகல சமய மக்களையும் ஒன்றிணைத்து இப்தார் நிகழ்வு ஒன்றினை நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தன.

மஸ்ஜிதுகள் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி சிராஸ் நூர்டீன் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைஸல் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக புத்தசாசன மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரண, கத்தோலிக்க சமய விவகார திணைக்களப் பணிப்பாளர் சத்துரி பிந்து, உதவிப் பணிப்பாளர்கள், இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் றிஸ்வி முப்தி, ஹஜ் குழுத் தலைவர் இப்ராஹிம் அன்சார், வக்பு சபைத் தலைவர் முஹைடீன் குஸைன் கொள்ளுப்பிட்டி பிரதேச மஸ்ஜிதுகள் சம்மேளத் தலைவர் நிஸான் குஸைன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# சமகால அரசியல் நிலைமைகள் குறித்து சண்டிலிப்பாயில் கலந்துரையாடல்



(சாவகச்சேரி நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம் பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டு சமகால அரசியல் விடயங்கள் தொடர்பான விளக்கங்களை வழங்கியிருந்தனர்.

மேற்படி நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சீனத் தூதரகத்தினால் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு




சீன - இலங்கை இருதரப்பு உறவு நிறுவப் பட்டதைக் கொண்டாடும் முகமாகவும், புனித ரமழானை முன்னிட்டும் கொழும்பில் வாழும் முஸ்லிம்களுக்கு சீனத் தூதரகத்தினால் பெக்ஸியன் (Faxian) தொண்டு திட்டத்தின் படி உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சீன பௌத்தர்களுடன் இணைந்து சீன பௌத்த ஆலயங்கள் ரமழானுக்காக சீன பௌத்த சங்கத்தின் ஊடாக உலர் உணவுப் பொதிகளை மக்களுக்கு கையளிக்க முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு - 09, தெமட்டகொடவில் அமைந்துள்ள வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேவையுடைய மக்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

உரிமைகளுக்கான அமைப்பின் முக்கியஸ்தரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உலமாக்கள், சீன தூதரக அரசியல் விவகார பணிப் பாளர், தூதரக அதிகாரிகள், முஸ்லிம் உரிமை களுக்கான அமைப்பின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





சித்திரை விசு திருவிழாவை முன்னிட்டு அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்வரூபன் யாத்திரைக் குழுவின் மாபெரும் சக்தி பூஜை, பஜனை மற்றும் அன்னதான நிகழ்வு முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. குழுவின் தலைவர் குரு சாமி ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலயத்தின் தர்மகர்த்தா துரைசாமி செட்டியார் பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டிருப்பதையும் பூஜை, பஜனை இடம்பெறுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (11.04.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 206.3021 | 219.7710 |
| கனேடியன் டொலர் | 229.4354 | 244.1291 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.4983 | 48.1129 |
| யூரோ | 338.0310 | 357.5120 |
| ஜப்பான் யென் | 2.3287 | 2.4626 |
| சிங்கப்பூர் டொலர் | 232.8316 | 246.9454 |
| ஸ்ரேலிங் பவுன் | 385.1068 | 406.9601 |
| சுவிஸ் பிரான்ங் | 340.9887 | 363.2561 |
| ஐ.அ. டொலர் | 311.4414 | 327.6693 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848.3634 |
| குவைட் | குவைட் தினார் | 1,041.8692 |
| ஓமான் | ஓமான் றியால் | 830.6919 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.4613 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.2513 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.0863 |

# கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் முப்படை வீரர்களின் பங்கேற்புடன் இப்தார் நிகழ்வு



ஜேனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 'இப்தார் 2023' நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பல்கலைக்கழகத்தின் உணவு விடுதியில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வானது அண்மைக்காலத்தில் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சகல மாணவர்களும் ஒரே இடத்தில் நோன்பு துறந்த ஒரு வரலாற்று முக்கிய நிகழ்வாகவும் கருதப்படுகின்றது.

இப்தார் என்பது ஒரு முஸ்லிம் பாரம்பரிய மாகும். இது சகல மனிதகுலத்தினர் மத்தியில் பசி பட்டினியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும் அமல்களில் ஒன்றாகும. இதன்மூலம் ஏழை மக்களின் பசியை உணர்ந்து செல்வம் படைத்த வர்கள் தர்மங்களை வாரி வழங்கும் மாதமாகும். எனவே, இப்தார் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர், மேஜர் ஜெனரல் எம்.பி.பீரிஸ் (RWP RSP VSV USP ndc psc MPhil), பிரதம அதிதியாக கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக மௌலவி அல்ஹாஜ் எம் ஃபாஸில் பாரூக்(Senior Executive Member of theACJU) கலந்துகொண்டு நோன்பின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

பிரதி உபவேந்தர் (பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்), பிரிகேடியர் DCA விக்கிரமசிங்க (USP USACGSC), பிரதி உபவேந்தர் (கல்வி), பேராசிரியர் KAS தம்மிக்க, பீடாதிபதிகள், நிகழ்வின் அனுசரணையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் மற்றும் சகல மதத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 300இற்கும் மேற்பட்ட மாணவர்களும் இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத்திட்டம் பயனாளிகளுக்கு கையளிப்பு






(பெரிய நீலாவணை செய்தியாளர், பாறுக் ஷிஹான், எஸ் அஷ்ரப்கான்)

2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காக கட்டப்பட்ட மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத்திட்டம் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்திருந்தது. குறித்த வீட்டுத்திட்டத்துக்குரிய பயனாளிகளை தெரிவுசெய்வதில் தொடர்ந்தும் ஏற்பட்ட இழுபறிநிலை காரணமாகவே இந்த வீடுகள் வழங்கப்படாமல் இருந்துவந்தன.

பல அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் இந்த வீட்டுத்திட்டத்தைப் பார்வையிட்டு அதனை விரைவில் வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கியபோதிலும் அவர்களால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனது. குறித்த வீட்டுத்திட்ட வீடுகள் உரிய மக்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததனால் அந்த வீடுகள் சேதமடைந்து உடைத்து களவாடப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டது.

இந்நிலையில், கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஜனாதிபதியினால் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப் நியமிக்கப்பட்டிருந்தார். அந்தவகையில், கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது மருதமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத்திட்டம் தொடர்பில் கேள்வி எழுப்பியதுடன், எப்போது இந்த வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும் என்ற கேள்வியையும் கேட்டிருந்தார்.

இந்த வீட்டுத்திட்டம் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயம்தான். இனியும் இதனை இழுத்தடிக்காமல் உரிய பயனாளிகளை தெரிவுசெய்து அந்த வீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று முஷாரப் எம்.பி. உறுதியளித்தார்.

மேலும், எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த வீட்டுத் தொகுதி மக்களிடம் கையளிக்கப்படும். இதற்காக கல்முனை பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்து உரிய பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பட்டியலை பூரணப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த வீட்டுத்திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காக மருதமுனைக்கு அண்மையில் விஜயம் செய்த முஷாரப் எம்.பி. வீட்டுத்திட்டத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபருடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கினார்.

இதற்கமைவாக, ஏப்ரல் 10ஆம் திகதி இந்த வீடுகளைக் கையளிப்பதற்கான செயற்பாட்டிலும் முஷாரப் எம்.பியுடன் இணைந்து கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில், இந்த வீட்டுத்திட்டத்தின் ஒரு தொகுதி வீடுகள் திங்கட்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டன. கல்முனை பிரதேச செயலாளரின் தலைமையில் பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முஷாரப் எம்.பி. கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், வீடுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். குறித்த வீட்டுத்திட்டத்தை மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையிலும் ஒழுங்குபடுத்துவதிலும் முழுமையாக செயற்பட்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், பாராளுமன்ற உறுப்பினரின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் பீ.எம்.எம்.ஜஃபர் ஆகியோருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.




அட்டாளைச்சேனை அன்-நம்ல் மன்றத்தினால் அட்டாளைச்சேனை பிரதேச 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் சனிக்கிழமை(08) மன்றத்தின் தலைவர் ஏ.எல்.முனாஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதேச செயலாளர்களான எம்.ஏ.சி.அஹமது ஷாபிர் , எஸ்.எல்.எம்.ஹனிபா, அம்பாறை மாவட்ட உதவி திட்டப் பணிப்பாளர் எம்.அனீஸ் மற்றும் வைத்தியர்களான எம்.முனாஸ், கே.எல்.நக்பர், அட்டாளைச்சேனை பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர், சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் மற்றும் பல சமூக சேவையாளர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர். (திராய்க்கேணி செய்தியாளர்)

# கல்முனை வலயக்கல்வி அலுவலக வருடாந்த இப்தார் நிகழ்வு




(மாளிகைக்காடு, கந்தளாய், எருவில் செய்தியாளர்கள், பாறுக் ஷிஹான்)

கல்முனை வலயக்கல்வி அலுவலக வருடாந்த இப்தார் நிகழ்வு கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் கல்விப் பணிமனை மண்டபத்தில் திங்கட்கிழமை(10) மாலை நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில், நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி எம்.எச்.றியால் (ஹாபீஸி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம்.வாஜித், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி, உதவி ஆணையாளர் எம்.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், பிரதி கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஏ.உமர் மௌலானா, ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்கள், ஓய்வுபெற்ற பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வலய தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ பாடசாலைகளின் அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புப் படையினர், கல்முனை பிரதேச செயலக உயர் அதிகாரிகள், மாநகராட்சி சபை நிறைவேற்று அதிகாரிகள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதானிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வு வலயக்கல்விப் பணிமனையின் கணக்காளர் வை.ஹபிபுல்லா தலைமையிலான குழுவினரின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




மூதூர் முஸ்லிம் பெண்கள் வலயமைப்பின் அங்குரார்ப்பணமும், இப்தார் நிகழ்வும் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (10) மாலை இடம்பெற்றது. மூதூர் முஸ்லிம் பெண்கள் வலயமைப்பு மற்றும் அகம் மனிதாபிமான வலயமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், அகம் மனிதாபிமான வலயமைப்பின் இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், மதகுருமார்கள், பெண் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (அப்துல்சலாம் யாசீம், மூதூர் செய்தியாளர்)

# சமுர்த்தி உதவி பெறும் மாணவர்களின் கற்கைநெறிக்கு இலவச புலமைப்பரிசில்




(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி உதவி பெறும் மாணவர்களுக்கு கல்முனை எமினன்ஸ் கல்லூரி கணினி மற்றும் ஆங்கில கற்கை நெறிகளுக்கு இலவச புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(10) சாய்ந்தமருது பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எல்.யூ.ஜுனைதாவின் வழிகாட்டலில் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் முயற்சியினால் கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இப்புலமைப்பரிசில் 30 மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் கலந்துகொண்டார். மேலும் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் கௌரவ அதிதியாகவும், கல்முனை எமினன்ஸ் கல்லூரியின் பணிப்பாளர் எம்.ஏ.எம்.மாஹிர் விசேட அதிதியாகவும் தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா, ஆங்கில விரிவுரையாளர் எம்.பி.எம்.நௌஷாட் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இதில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.ஆதம்பாவா, எம்.ஐ.அன்சார், ஏ.எம்.நளீம் உள்ளிட்ட பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இப்புலமைப்பரிசில் திட்டத்திற்காக ஒரு மாணவருக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் 30 மாணவர்களுக்கும் 15 இலட்ச ரூபாவை கல்முனை எமினன்ஸ் கல்லூரி செலவு செய்கின்றது. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சமுர்த்தி பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பு, சமுர்த்தி வங்கிச் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து கல்முனை எமினன்ஸ் கல்லூரி இப்புலமைப்பரிசில் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.




வருடாவருடம் நாபீர் பௌண்டேசனால் நடத்தப்படும் புனித ரமழான் நோன்பின் பிரமாண்டமான இப்தார் நிகழ்வு திங்கட்கிழமை (10) மாலை சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் சமூக செயற்பாட்டாளர் பாயிஸ் கரீம் தலைமையில் இடம்பெற்றது. நாபீர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் ECM நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான பொறியியலாளர் அல்ஹஜ் உதுமான்கண்டு நாபீரின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதான மார்க்க சொற்பொழிவை அஷ்-ஷெய்க் எம்.எச்.ஆஷிக் இலாகி வாரி நிகழ்த்தினார். இதன்போது நிகழ்வின் ஏற்பாட்டாளர் அல்ஹஜ் உதுமான்கண்டு நாபீரின் மரணித்த தந்தையாருக்காக துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது. (பாறுக் ஷிஹான்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்த 20 மில்லி கிராம் ஹெரோயினை கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (11) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எழுத்தாளர் மர்ஹூம் ஆசுகவி அன்புடீனின் நினைவுப் பேருரையும் துஆப் பிரார்த்தனையும்



(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் மர்ஹூம் ஆசுகவி அன்புடீனின் நினைவுப் பேருரையும் விசேட துஆப் பிரார்த்தனையும் ஞாயிற்றுக்கிழமை(09) மாலை ஒலுவில் கிறீன் விலாவில் நடைபெற்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் முன்னாள் தேசிய தலைவரும் தற்போதைய நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மர்ஹூம் ஆசுகவி அன்புடீன் பற்றி அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் முன்னாள் தேசிய தலைவரும், தற்போதைய நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.உதுமாலெப்பை மற்றும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் பாவேந்தல் பாலமுனை பாறூக் ஆகியோர் உரையாற்றினர்.

மர்ஹூம் ஆசுகவி அன்புடீனுக்காக விசேட துஆப் பிரார்த்தனையை அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை சம்மேளனத்தின் முன்னாள் தலைவர், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் மௌலவி யூ.எம்.நியாஸி மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாபிழ் என்.எம்.அப்துல்லா, டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ராஜாப், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை சம்மேளனத்தின் தவிசாளர் எம்.எம்.அஜ்வத், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் முகம்மது நியாஸ், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை சம்மேளனத்தின் பிரதம ஆலோசகர் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஆதம்பாவா, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்கள், அமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மர்ஹூம் ஆசுகவி அன்புடீன், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை சம்மேளனத்தின் தலைவராகவும் வை.எம்.எம்.ஏ. அட்டாளைச்சேனை உப தலைவராகவும் சிறந்த முறையில் செயற்பட்டவராவார். நிகழ்வின் பின்னர் இப்தார் நிகழ்வு நடைபெற்றது.



திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் செவ்வாய்க்கிழமை (11) தி/கி/அல் ஹிக்மா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. ரெக்டோ நிறுவனத்தினர் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் தெரிவுசெய்யப்பட்ட காத்திருப்பு பட்டியலில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், ரெக்டோ நிறுவனத்தினர், கிராமசேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)

# அடாவடி பிக்குகளிடமிருந்து எமது காணிகளை காப்பாற்ற வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

அடாவடி பிக்குகளிடமிருந்து எங்கள் காணிகளை காப்பாற்ற வேண்டும் - என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, புல்மோட்டை பொன்மலைக்குடா பிரதேசத்திற்கு திங்கட்கிழமை(10) வருகை தந்து பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 29ஆம் திகதி முஸ்லிம் இனத்தவர்களுக்குச் சொந்தமான காணியில் புத்தர் சிலையை வைப்பதற்கு முயற்சித்தபோது அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. பிக்குவின் அட்டகாசங்கள் குறித்து கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன. அதனைத் தொடர்ந்து இப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாம் இங்கு விஜயம் மேற்கொண்டோம்.

சிலநேரங்களில் பிக்குமார்கள் நேரடியாக புல்மோட்டை மக்களிடம் வந்து துப்பாக்கிகளைக் கொண்டு அச்சுறுத்துவது, மிரட்டுவது மற்றும் கற்களைப் போடுவது போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. வடக்கு, கிழக்கிலே தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் அனைத்து பிரதேசங்களிலுமே இதுபோன்ற விடயங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. நாங்கள் இவ்விடயங்களுக்கு எதிராக போராட்டங்களை செய்திருக்கின்றோம். தொடர்ந்தும் நாங்கள் போராடுவோம் எனவும் இரா.சாணக்கியன் எம்.பி. இதன்போது குறிப்பிட்டார்.





இவ்விஜயத்தின்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.குகதாசன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள் easttthamilan@gmail.com

# தமது காணியை மீட்டுத்தருமாறு திரியாய் கிராம மக்கள் கோரிக்கை





(அப்துல்சலாம் யாசீம்)

திரியாய் பிரதேச மக்களுக்கு சொந்தமான 3ஆயிரத்து 600 ஏக்கர் காணியை மீட்டுத் தருமாறும் இல்லையேல் பாரிய போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் திருகோணமலை திரியாய் பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட கிளை தலைவர் எஸ்.குகதாசன் தலைமையில் திரியாய் பிரதேசத்தில் பொதுமக்கள் பிரச்சினைகள் ஆராயும் விசேட கூட்டம் திங்கட்கிழமை (10) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியனிடம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதன்போது, திரியாய் கிராமம் பல்வேறு தரப்பினராலும் பங்கு போட்டு அபகரிக்கப்பட்டு வருகின்றது. இங்கு எம்மால் வாழ முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். திரியாய் பிரதேசத்திலுள்ள கிரிஹன்டுசாய விகாரையின் விகாராதிபதி தனது விகாரைக்கு 2010ஆம் ஆண்டில் 3600 ஏக்கர் நிலம் ஒதுக்கியிருந்ததாகவும், இது நல்லாட்சிக் காலத்தில் 257 ஏக்கராக குறைக்கப்பட்டு விட்டதாகவும், 3600 ஏக்கர் காணியை தமக்கு மீண்டும் அளந்து தருமாறும் பல மட்டங்களிலும் வலியுறுத்தி வருகின்றார்.

இந்நிலையில், குறித்த 3600 ஏக்கர் நிலப்பகுதியை அளந்து உரிய நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதி செயலகத்திலிருந்து குச்சவெளி பிரதேச செயலாளருக்கு கடிதம் வந்துள்ளது. இருந்தபோதிலும், கிரிஹன்டுசாய விகாரைக்கு 3600 ஏக்கர் நிலம் அளந்தால் எமது வயல் நிலங்களும் வீடு வளவுகளும் அதற்குள் சென்று விடும். எங்களுக்கு வாழ இடம் இருக்காது. நாங்கள் எல்லோரும் கடலிலே குதிக்க வேண்டிய சூழல்தான் வரும் எனவும் தெரிவித்தனர்.

கிரிஹன்டுசாய விகாரையின் விகாராதிபதி திரியாயில் பரவி பாஞ்சான் என்ற இடத்தில் உள்ள தமிழர்களுக்கு உரித்தான காணிகளை துப்புரவாக்கி நெல் பயிரிட்டு வருகின்றார். பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தபோதும் காத்திரமான எந்தவொரு நடவடிக்கையும் இன்னும் எடுக்கப்படவில்லை. பொலிஸாரிடம் கேட்டால் தங்களால் ஒன்றும் செய்யமுடியாதுள்ளது என்றும் இதை மேலிடத்தில் கதைத்து பாருங்கள் என்றும் தெரிவிக்கின்றனர்.


அத்துடன், ஆத்திக்காடு, பாவலன் கண்டல், நீராவிக் கண்டல் ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் விவசாயம் செய்து வரும் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நெல் வயலை தொல்பொருள் திணைக்களத்தினர் கற்கள் கொண்டு நிரப்பி வைத்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக அதற்குள்ளே விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த பகுதி மக்கள் தமக்குச் சொந்தமான 3600 ஏக்கர் காணியை மீட்டுத்தருமாறும் இல்லாவிட்டால் பாரிய போராட்டங்களை முன்னெடுக்க நேரிடுவதாகவும் தெரிவித்தனர்.

# கல்முனையில் தனியார் வகுப்புகளை 24ஆம் திகதிவரை இடைநிறுத்துக!

## மாநகர ஆணையாளர் அஸ்மி அறிவிப்பு

(பாறுக் ஷிஹான், சாய்ந்தமருது செய்தியாளர்)



KALMUNAI MUNICIPAL COUNCIL

கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம் 01 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் செவ்வாய்க்கிழமை 11ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ் - சிங்களப் புதுவருடப்பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளைக் கொண்ட இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாக காணப்படுகின்றபோதிலும், கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதானது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கை களுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக மத அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து எமக்கு தொடர்ச்சியாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



**வலுக்கட்டாயமாக தமிழர்கள் விக்கிரகங்களை வைக்கமுடியாது என ஜனாதிபதி ரணில் சொல்லியிருக்காரு எலுவா? சிங்களவர்கள் வலுக்கட்டாயமாக புத்தர் சிலைகளை வைக்கிறாங்க அது இந்த நரிலுக்கு கண்ணுக்கு தெரியாமல் இருப்பது ஏன்.? ஆரு சிங்களத் தலைவர்கள் ஆட்சில இருந்தாலும் தமிழருக்கு எதிரான போக்குத்தான் எண்டதில எந்த மாற்றமும் இல்ல எலுவா..?**

# மீனவர்களுக்கிடையிலான கைகலப்பில் கைது செய்யப்பட்டவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை திருக்கடலூர் - விஜிதபுர மீனவர் கைகலப்பு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் றஸ்ஸாக் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (11) குறித்த சந்தேக நபரை ஆஜர்படுத்தியபோது இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - திருக்கடலூர் மற்றும் விஜிதபுர பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு தொடர்பில் தலைமையகப் பொலிஸாரினால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. முதலாவது வழக்கில் கைதுசெய்யப்பட்ட 9 சந்தேக நபர்களில் எட்டு சந்தேக நபர்களுக்கு செவ்வாய்க்கிழமை(11) ஐந்து இலட்ச ரூபா சரீரப் பிணையில் செல்ல திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருந்தபோதிலும், கைதுசெய்யப்பட்ட மற்றைய சந்தேக நபரான திருகோணமலை திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த வடிவேல் பிரதீபன் (35 வயது) என்ற சந்தேக நபருக்கு எதிராக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் சர்வதேச மற்றும் அரசியல் குடியியல் உரிமைகள் சட்டத்தின் (ICCPR) கீழ் 2007ஆம் ஆண்டு 56ஆம் இலக்க மூன்றாம் பிரிவின் கீழ் குறித்த சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் குறித்த சந்தேக நபருக்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ள நிலையில், தேசிய இன ரீதியான அல்லது மத ரீதியான வெறுப்புணர்வைத் தூண்டும் விதத்தில் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் மேல் நீதிமன்றத்திற்கு மாத்திரம் உள்ளது என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதுடன், முழுமையான ஆதாரங்கள் போதுமானதல்ல என்றும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு நியாயமான அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் நீதவான் அறிவுறுத்தல் வழங்கினார்.

# ஊடகவியலாளர்களுக்கு உலருணவுப் பொருட்கள்





(மூதூர், கிண்ணியா செய்தியாளர்கள்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 40 ஊடகவியலாளர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அகம் மனிதாபிமான வள நிலைய அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றது.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு மற்றும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு, மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்கள் குறைந்த வருமானத்தில் நிறைவான சேவையை வழங்குவதை கௌரவப்படுத்தும் நோக்கில் இவ்வுலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அகம் மனிதாபிமான வலயமைப்பின் இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்கள் பரிசீலிப்பு

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களின் பராமரிப்பு நடவடிக்கை காரணமாக கோபுரங்களில் இருந்து ஒலி எழுப்பப்பட்டு, கோபுரங்களின் ஒலிபெருக்கிகள் திங்கட்கிழமை (10) பரிசீலிக்கப்பட்டன.

இதற்கமைய களுவாங்கேணி, காத்தான்குடி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிலுள்ள முன்னெச்சரிக்கை கோபுரங்களின் ஒலி பெருக்கிகள் பரிசீலிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனுசரணையுடன் 233 இராணுவ படைப்பிரிவின் இராணுவ அதிகாரிகள் இதனை பரிசீலிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவின் புதிய காத்தான்குடி தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரம் பரிசீலிக்கப்பட்டு, மதியம் 12.50 மணியளவில் பரிசீலிப்பு ஒலி எழுப்பப்பட்டது. இதன்போது இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்ட மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகள் அங்கு சமுகமளித்திருந்தனர்.



**பாலமுனை ஹிறா நகர் பள்ளிவாசல் வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானமும் மர நடுகையும் சனிக்கிழமை (08) இடம்பெற்றன. பாலமுனை இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் தலைவர் சீத் ஆதம்லெப்பை, அமைப்பின் ஆலோசகரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியுமான டொக்டர் எஸ்.றிபாஸ்தீன் உட்பட இளைஞர் அமைப்பின் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

(பாலமுனை செய்தியாளர்)

## வீதியோர வியாபாரத்துக்கு தடை விதித்ததால்

# மட்டு. மாநகர சபைக்கு ரூ.20 இலட்சம் இழப்பு

## முன்னாள் மாநகர சபை உறுப்பினர் றம்ழான் சுட்டிக்காட்டு

(காத்தான்குடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாநகர சபையினால் வீதியோர வியாபாரத்திற்கு விதிக்கப்பட்ட தடையினால் வருடம் ஒன்றுக்கு சராசரியாக 20 இலட்சம் ரூபா வருவாய் இழக்கப்பட்டுள்ளதாக முன்னாள் மாநகர சபை உறுப்பினர் என்.கே.றம்ழான் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கடந்த காலங்களில் வீதி போக்குவரத்துக்கு இடையூறின்றி வீதியோர வியாபாரங்களை மேற்கொள்வதற்கான அனுமதியினை மாநகர சபை வழங்கியிருந்தது. அதனால் தினசரி சராசரியாக 7 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் வருமானமாக மட்டக்களப்பு மாநகர சபை ஈட்டி வந்தது.

தற்போது வீதியோர வியாபாரத்திற்கு தடை விதித்துள்ளதால் அவ்வருமானம் இழக்கப்பட்டுள்ளது. இதனால் மாநகர சபைக்கு வருடமொன்றுக்கு குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபா அளவில் வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி, பல அங்காடி வியாபாரிகளும் தங்களது தொழிலையும் வருமானத்தையும் இழந்துள்ளதுடன் நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரிய தொகை பணத்தை செலுத்தி வாடகைக் கடை ஒன்றினை பெற்று வியாபாரம் செய்ய வசதியற்ற சிறு முதலீடுகளைக்கொண்டு வியாபாரம் செய்து தங்களது குடும்ப வருமானத்தை ஈட்டி வந்த சிறு சிறு வியாபாரிகளின் தொழில் இதனால் முற்றாக இழக்கப்பட்டுள்ளது.



அதேபோன்று பெரிய கடைகளுக்குச் சென்று அதிக விலை கொடுத்து பொருட்களை கொள்முதல் செய்ய முடியாத நுகர்வோரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு சிறு பயிர்ச் செய்கையாளர்களும் தங்களது அறுவடைகளான சோளம், கச்சான் போன்றவைகளை வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் வீதியோர வியாபாரத்திற்கென சில பகுதிகளை ஒதுக்கி அதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளது. ஆனால், மட்டக்களப்பு மாநகர சபை ஒருசில சிறு உற்பத்திப் பொருட்களை வியாபாரம் செய்யும் வகையில் ஒரு பகுதியை பழைய கல்லடிப்பாலத்தடியில் வழங்கியுள்ளது. இது ஒருசிலருக்கு மட்டுமே போதுமானதாகும். எனவே, சிறு முதலீடுகளைக்கொண்டு வியாபாரம் செய்துவரும் வியாபாரிகள் தங்களது தொழிலை மேற்கொள்ளுவதற்கும் நுகர்வோர்கள் குறைந்த விலைகளில் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் மாநகர சபையின் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்குமாக பொதுப்போக்கு வரத்திற்கு இடையூறின்றி வீதியோர வியாபாரங்களை மேற்கொள்வதற்கும் அனுமதியை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# மே 6இல் பிரித்தானிய மன்னர் 3ஆம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா

## அரசரின் கால்தடம் பட காத்திருக்கும் தங்கமுலாம் பூசிய சாரட் வண்டி



பிரித்தானிய மன்னராக மூன்றாம் சார்ள்ஸும், ராணியாக கமிலாவும் அடுத்த மாதம் முடிசூடவுள்ள நிலையில், விழா ஏற்பாடுகள் குறித்த புதிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் கடந்த ஆண்டு செப்டெம்பரில் உடல்நலக் குறைவால் மரணமடைந்ததைத் தொடர்ந்து, 74 வயதான அவரது மகன் மூன்றாம் சார்ள்ஸ் பிரித்தானியாவின் மன்னராக பதவியேற்றார். இதைத் தொடர்ந்து அவரது அதிகாரப்பூர்வமான முடிசூட்டு விழா எதிர்வரும் மே 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது. லண்டனிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் பாரம்பரிய வழக்கப்படி இடம்பெறும் விழாவில் பிரித்தானிய மன்னராக சார்ள்ஸும், ராணியாக கமிலாவும் முடிசூடவுள்ளனர்.




கடைசியாக கடந்த 1953ஆம் ஆண்டு ராணி 2ஆம் எலிசபெத் முடிசூடிய பிறகு 70 ஆண்டுகளுக்குப் பின்னர் அரச குடும்பத்தில் இடம்பெறும் முடிசூட்டு விழாவை பிரித்தானிய மக்கள் ஆர்வமுடன் எதிர்பார்த்துள்ளனர். இந்த விழாவுக்காக சார்ள்ஸும் அவரது மனைவி கமிலாவும் பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு டயமன்ட் ஜூபிலி ஸ்டேட் சாரட் வண்டியில் குளிரூடப்பட்ட கேபினில் பயணிப்பார்கள். அதைத் தொடர்ந்து, மன்னராக சார்ள்ஸ் முடிசூட்டப்பட்ட பின்னர் பெக்கிங்ஹாம் அரண்மனைக்கு பாரம்பரியமான கோல்ட் ஸ்டேட் சாரட் வண்டியில் திரும்புவார். 8 குதிரைகள் பூட்பட்ட இந்த சாரட் வண்டி சுமார் 260 ஆண்டுகள் பழமையானது.

முதல் முறையாக 1762ஆம் ஆண்டில் மன்னர் 3ஆம் ஜோர்ஜ் பிரித்தானிய பாராளுமன்ற கட்டடத்தை திறந்து வைக்க இந்த சாரட் வண்டியில் பயணித்தார். அதன் பின்னர் ஒவ்வொரு முடிசூட்டு விழாவிலும் இந்த சாரட் வண்டி பாரம்பரியமாக பயன்படுத்தப்படுகிறது.

இந்த முடிசூட்டு விழாவின்போது மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் பாரம்பரிய மரபுப்படி கையில் செங்கோல் ஏந்தி அந்த சிம்மாசனத்தில் அமர்வார். அதைத் தொடர்ந்து, மூத்த மதகுருமார்களால் புனிதப்படுத்தப்பட்டு, மன்னர் ஆசீர்வதிக்கப்படுவார். அதன்பின்னர், அரச வம்சத்து சடங்குகளுடன் முடிசூடும் மன்னர் சார்ள்ஸுக்கு செயின்ட் எட்வர்ட்டின் விலை உயர்ந்த கிரீடம் சூட்டப்படும்.

இந்த கிரீடத்தில் வைரம், வைடூரியம், மரகதம் என 444 விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. ராணி கமிலாவுக்கு மரகத கல் பதித்த மோதிரம் அணிவிக்கப் படும். மேலும், பல்வேறு பாரம்பரிய பொருட் களுடன் ராஜ அலங்கார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இதில் இடம்பெறும் பல பொருட்களும் 1000 ஆண்டுகள் பழமையானவை என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து பெக்கிங்ஹாம் அரண்மனையின் பெல்கனியிலிருந்து புதிய மன்னர் சார்ள்ஸ் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். அந்த தினமே, மன்னர் சார்ள்ஸின் மனைவியான கமிலாவும் இங்கிலாந்து ராணியாக முறைப்படி அறிவிக்கப்படுவார். மன்னரின் முடிசூட்டு விழாவில் உலகம் முழுவதிலுமிருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரபலங்களும், பிரித்தானியாவைச் சேர்ந்த தொண்டு மற்றும் சமூக குழுக்களின் 850 பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

## அமெரிக்காவின் கைப்பாவையாக செயற்படுகிறது...

# தென்கொரியாவுடனான தகவல் தொடர்பை துண்டித்தது வடகொரியா

அமெரிக்காவின் கைப்பாவையாக தென்கொரியா செயற்பட்டுவருகிறது என சாடியுள்ள வடகொரியா, தென்கொரியாவுடனான தகவல் தொடர்பை துண்டித்துக்கொண்டுள்ளது.

1950ஆம் ஆண்டு நடந்த கொரிய போரின்போது வடகொரியாவும், தென்கொரியாவும் தனித்தனி நாடுகளாக பிரிந்தன. அப்போது முதல் இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான பகைமை நிலவி வருகிறது. எனினும், அவ்வப்போது இரு நாடுகளும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை எடுப்பதும், பின்னர் அது கைவிடப்படுவதும் தொடர்கதையாக உள்ளது.

அந்த வகையில் கடந்த 2018ஆம் ஆண்டு இரு நாடுகளின் எல்லையிலுள்ள இராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் தகவல் தொடர்பு அலுவலகம் அமைக்கப்பட்டு, இரு நாடுகளிடையே அரசு நிலையிலான நேரடி தொலைபேசி இணைப்பு தொடங்கப்பட்டது. ஆனால், கடந்த 2020ஆம் ஆண்டு வடகொரியாவிலிருந்து தென்கொரியாவுக்கு தப்பிச் சென்றவர்கள் வடகொரியாவுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் அடங்கிய ஹீலியம் பலூன்களை வடகொரியாவுக்கு அனுப்பியது சலசலப்பை ஏற்படுத்தியது.

இதனால் கோபமடைந்த வடகொரியா தகவல் தொடர்பு அலுவலகத்தை குண்டு வைத்து தகர்த்ததுடன், தென்கொரியாவுடனான நேரடி தொலைபேசி இணைப்பைத் துண்டித்தது. எனினும், ஓராண்டுக்குப் பின்னர் வடகொரியா - தென்கொரியா இடையே தகவல் தொடர்பு மீண்டும் தொடங்கியது.



இந்நிலையில், அண்மைக்காலமாக அமெரிக்காவுடன் தென்கொரியா இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டு வருவது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது. கூட்டுப்போர் பயிற்சியை கைவிடும்படி இரு நாடுகளையும் வடகொரியா தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

இந்நிலையில், தென்கொரியாவுடனான நேரடி தகவல் தொடர்பை வடகொரியா மீண்டும் துண்டித்துள்ளது. கடந்த 4 நாட்களாக தென்கொரிய அரசின் அழைப்பை வடகொரிய தரப்பு ஏற்கவில்லை என தென்கொரியா தெரிவித்துள்ளது. மேலும் அண்டைநாடான தென்கொரியா, அமெரிக்காவின் கைப்பாவையாக செயற்படுவதாகவும், தங்களுக்குத் துரோகம் செய்வதாகவும் வடகொரியா அரசு சாடியது.

# தாய்வானை சொந்தம் கொண்டாடும் சீனாவுக்கு அமெரிக்கா முட்டுக்கட்டை

**உலக செய்திகள்**

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையேயான 70 ஆண்டுகால மோதல் தற்போது உச்சத்தையெட்டியுள்ள நிலையில், சீனாவுக்குப் பதிலடியாக மீண்டும் தாய்வானும் தனது இராணுவத்தை தயார்நிலைப்படுத்தியுள்ளது. இதனால் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தாய்வான் ஜனாதிபதி சாய் இங் வென் அமெரிக்காவுக்கு சென்றதோடு, அங்கு பிரதிநிதி சபைத் தலைவர் கெவின் மெக்கார்த்தியை சந்தித்தார். இதனால் ஆத்திரமடைந்துள்ள சீனா, தனது போர் விமானங்களை தாய்வானை சுற்றி பறக்கவிட்டு வருகிறது.


தங்களுக்குச் சொந்தமான தாய்வான் விடயத்தில் எவரும் தலையிடக்கூடாது என்றும் சீனா எச்சரித்து வருகிறது. இதற்குப் பதிலடியாக தாய்வானும் போர் விமானங்கள் மற்றும் இராணுவத்தை தயார்படுத்தும் விடியோவை மீண்டும் வெளியிட்டுள்ளது. 1949ஆம் ஆண்டு சீனாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு



வந்ததைத் தொடர்ந்து பல தீவுகளைக்கொண்ட தாய்வான் தன்னை இறையாண்மைமிக்க தனிநாடாக அறிவித்து செயற்பட்டு வருகிறது.

ஆனால், இதை ஏற்காத சீனா இப்போதும் தாய்வானை சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் பிரதிநிதி சபையின் முன்னாள் தலைவர் நான்சி பெலோசி கடந்த ஆண்டு தாய்வானுக்கு சென்றது சீனாவை மேலும் எரிச்சலூட்டியது. அதைத் தொடர்ந்து தாய்வானையும், அதற்கு துணை நிற்கும் அமெரிக்காவையும் எதிர்க்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது சீனா. இரு நாடுகளும் மாறி மாறி போர்ப் பயிற்சி விடியோக்களை வெளியிடுவதால் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

## ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கவுள்ள பைடன்



2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலும் தான் போட்டியிடவுள்ளதாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ள அதேவேளை, அதிகாரப்பூர்வ அறிவிப்பை இன்னும் வெளியிடவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி பதவிக்கு தானும், துணை ஜனாதிபதி பதவிக்கு கமலா ஹாரிஸும் கூட்டாக போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

**TATA IPL**

**இன்றைய போட்டி**
போட்டி இல. - 17
சென்னை எதிர் ராஜஸ்தான்
நேரம் - இரவு 7.30
இடம் - சென்னை

**விளையாட்டு செய்திகள்**
thamilansports@gmail.com

# பொல்லார்டின் சாதனையை முறியடித்த கோஹ்லி



ஐ.பி.எல்லில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் கைரன் பொல்லார்டின் சாதனையை முறியடித்து விராட் கோஹ்லி 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளார்.

நேற்று முன்தினம் லக்னோ அணிக்கெதிரான போட்டியில் 4 சிக்ஸர்களை விளாசிய விராட் கோஹ்லி, ஐபிஎல்லில் அதிக சிக்ஸர்கள் விளாசிய வீரர்கள் பட்டியலில் கைரன் பொல்லார்டை பின்னுக்குத்தள்ளி 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளார். விராட் கோஹ்லி இந்த 4 சிக்ஸர்களின் மூலம் ஐபிஎல்லில் மொத்தமாக 227 சிக்ஸர்களை விளாசியுள்ளார். 223 சிக்ஸர்களுடன் 5ஆம் இடத்தில் இருந்த பொல்லார்டை பின்னுக்குத்தள்ளி 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளார்.

ஐ.பி.எல்லில் அதிக சிக்ஸர்கள் அடித்த டொப் 5 வீரர்கள்

1. கிறிஸ் கெய்ல் - 357 சிக்ஸர்கள்
2. டி வில்லியர்ஸ் - 251 சிக்ஸர்கள்
3. ரோஹித் சர்மா - 241 சிக்ஸர்கள்
4. டோனி - 232 சிக்ஸர்கள்
5. விராட் கோஹ்லி - 227 சிக்ஸர்கள்

# 115 மீற்றரில் சிக்ஸர் விளாசிய டு பிளசிஸ்




நடப்பு ஐ.பி.எல். தொடரில் லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூர் அணியின் கேப்டன் டு பிளசிஸ் 115 மீற்றர் தூரத்திற்கு சிக்ஸர் அடித்துள்ளார். நடப்பு சீசனில் அடிக்கப்பட்ட நீண்ட தூர சிக்ஸராக இது அமைந்தது.

பெங்களூர் அணியின் பேட்டிங்கின்போது 15 ஆவது ஓவரை லக்னோ அணியின் பிஷ்னோய் வீசினார். 3ஆவது பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய டு பிளசிஸ், அடுத்த பந்தை 115 மீற்றர் தூரத்திற்கு அனுப்பி இமாலய சிக்ஸர் ஒன்றை அடித்தார்.

# 6 வருடங்களின் பின் மீண்டும் சம்பியன் மகுடத்தை சுவீகரித்தது யங் ஹீரோஸ்



**(றிழ்ஹான் வாஹித்)**

இலங்கை கிரிக்கெட் சபையால் நடைபெறும் டிவிஷன் 2 போட்டிகளின் இறுதிப்போட்டியில் பலம் பொருந்திய திருமலையின் டைனாமிக் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஏறாவூர் யங் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது.

அண்மையில் மட்டக்களப்பு சந்திவெளி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டைனாமிக் அணியினர் 42.4 ஓவர்களில் மொத்தமாக 166 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தனர்.

164 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய ஏறாவூர் யங் ஹீரோஸ் அணியினரின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக நௌசாத் மற்றும் அதிரடி துடுப்பாட்ட வீரர் அசார்தீன் களமிறங்கினர். 165 என்ற இலகுவான இலக்கை நோக்கி ஆடிய யங் ஹீரோஸ் அணியினர் 29.4 ஓவர்களில் இலகுவாக வெற்றியிலக்கை அடைந்து 2022ஆம் ஆண்டின் மாகாண சம்பியன்களாக மகுடம் சூடினர்.

இலங்கை கிரிக்கெட் சபையால் நடைபெறும் டிவிஷன் 2 போட்டிகளில் கலந்துகொள்ளும் யங் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் 2016ஆம் ஆண்டு டிவிஷன் 2 அணியாக உருப்பெற்று அந்த ஆண்டே மாகாண சம்பியன்களாக வலம் வந்தமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் கிரிக்கெட் சுற்றுத்தொடர்



**(வி.சுகிர்தகுமார்)**

அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக இடம்பெறவுள்ள பிரிமியர் லீக் 2023 கிரிக்கெட் சுற்றுத்தொடரின் கழக அறிமுக நிகழ்வும் கிரிக்கெட் சுற்றுத்தொடர் தொடர்பான கருத்துகள் பரிமாற்ற நிகழ்வும் அண்மையில் விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ள விபுலானந்தா அபிவிருத்தி நிலையத்தின் முத்து விழாவை சிறப்பிக்கும் முகமாகவும் இளைஞர்களை இந்து இளைஞர் மன்றத்தினுள் உள்வாங்கி அதன்மூலம் அவர்களை சமூகப்பணிக்குள் அழைத்துச் செல்லும் வேலைத்திட்டத்தின் கீழும் இச்சுற்றுப்போட்டி நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான அனுசரணையை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், மிஸ்டர் பிறைம் உரிமையாளர் க.ததீஸ்வரன், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் த.கிரோஜாதரன், சமூக செயற்பாட்டாளர் பிரதீபன் உள்ளிட்டோர் வழங்கவுள்ளனர்.

போட்டித்தொடர் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் பிரமாண்டமான முறையில் இடம்பெறவுள்ளதுடன், சீருடை அறிமுக நிகழ்வும் அன்றையதினம் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# விளாவட்டவான் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி!



**(கல்லடி செய்தியாளர்)**

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு விளாவட்டவான் விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் விளாவட்டவான் ராஜா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

2023ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் வெற்றிபெற்று சம்பியனாக மகுடம் சூட, கம்பர் இல்லம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அத்தோடு இல்ல அலங்கரிப்பிலும் வள்ளுவர் இல்லம் வெற்றிபெற்றது. அனைத்துப் போட்டியிலும் வள்ளுவர் இல்ல மாணவன் தி.லக்சன் இந்த வருடத்துக்கான சிறந்த வீரனாக தெரிவுசெய்யப்பட்டார்.

பாடசாலை அதிபர் நவரெத்தினம் நவேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) எஸ்.மகேந்திரன், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி அலுவலக கணக்காளர் ஆர்.சிவகுமார், வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், முன்னாள் அதிபர்கள் மற்றும் விளாவட்டவான் கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7